திரௌபதை குறம்

D-87,GPU,D
N49
102143

44

உ

கடவுள் துணை.

15 NOV 1949
MADRAS

புகழேந்திப்புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

துரோபதை குறம்.

102143

அமரம்பேடு-இராஜாரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1949 [அணா 12.

நெ-23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

O-87QUV;D N49 102143

கடவுள் துணை

துரோபதை குறம்

விருத்தம்

திருந்திய தழற்பாஞ்சாலி செல்வத்துரோபதையாமங்
பெருந்திருவாள் தன்பக்கல் பேசியகுறத்தைப்பாட [கை
பொருந்தியசெய்வச்செம்பொற் றிகழ்மலைவாழுங்கங்கை
தருங்சயமுகனை நித்தம் தாமதுதிசெய்வீரே.

ஆதியேயரியேபோற்றி அச்சுதாபோற்றிபோற்றி
சோதியேபோற்றிபோற்றி சுடரொளிவிளக்கேபோற்றி
நாதனேவர்ளிடங்கா நாரணன்மருகாபோற்றி
காதலாற்குறத்தைப்பாடக் சுந்தனேயருள் செய்வாயே.

பஞ்சபாண்டவர்கள்தேவி பாஞ்சாலிபாவைதானும்
வஞ்சகன் திரியனாலே வனவாசப்பன்னிரண்டும்
தஞ்சமாய்க்கழிந்தபின்பு தானுமேவிராடதேசம்
வஞ்சியுமன்னர்கூட வந்துமேதோன்றினரே.

பரமசிவம்.

கலிவிருத்தம்

மஞ்சுலவுபாஞ் சாலன் நன்மாநகர்
விஞ்சு துரோபதை மேற்கூறு நற்குற
வஞ்சிமாலை வழுத்தவே திங்களார்
செஞ்சடிலன் றிருவடி வாழ்த்துவாம்.

விநாயகர்.

பொன்னுமாமணிப் பூங்குழற்பொற்பினு
டுன்னுபாஞ்சாலி வஞ்சிக்குறஞ்சொலப்
பன்னுதும்பையும் கொன்றைப்பனிமதி
மின்னும்வேழமுகவனை வேண்டுவாம்.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

திங்களறுகரவணியுஞ் சடையிலங்குபொன்முடியுஞ்
செயிர்தீர்நன்மா
தங்கவதனந் தயங்கநான்மறையுஞ்சயசயவென்
றேத்திப்போற்றப்

பொங்கமுடனின்ற நல்லோய்தமியனுக்கிந்நூற்குறம்
புளகம்பூப்பப்
பங்கமறவென்னுவிலிருந்துபொருண்மாறூதருள்
பாலிப்பாயே.

10 NOV 1943

வேறு

திருந்தியமொழிப்பாஞ்சாலி சீர்கதைதமிழிற்பாடப்
பெருந்திருவாளின்பாதம் பெட்புடன்வணங்கியேத்திப்
பொருந்திய நூறுவண்ணம் புகல்குறவஞ்சியாக
வருந்தியேயிந்தக்காதை வளம்பெறப்பாடுவாமால்.

வெண்செந்துறை - விநாயகர் துதி

விக்கினவிநாயகரே வேலவரேமுன்னடவும்
சத்திவிநாயகரே சரிந்தவயிற்றோனே
அந்திபகலுமுமை அன்மாக நான்மறவேன்
முந்திமுந்திஎந்தனுக்கு முன்னடக்கவேண்டுமையா
ஒருகையில்மோதகமும் ஒருகையில்செங்கரும்பும்
ஒருகையில்தேங்காயும் ஒருகையில்நற்கரும்பும்
இத்தனைபெற்றுமல்லோ இருந்தீர்மரத்தடியில்
உம்மைக்கண்டுபரமசிவன் கருத்தில்நினைவாகி
விக்கினரும்வேலவரும் இருவரும்வாருமென்றார்
அந்தவுரைகேட்டு அடிதொழுதீர்இருவர்களும்
பரமசிவன்பார்த்துப் பார்வதியைக்கண்காட்டி
பிள்ளைகளைத்தான்பார்த்துப் பூரிப்பாயேதுசொல்வார்
ஈரேழுலகமெல்லாம் இருவருஞ்சுற்றிவந்தால்
சுற்றிவந்துநின்றவர்க்கு இந்தக்கனிதருவேன்
என்றவுரைகேட்டு எழுந்தாரேவேலவரும்
பச்சைமயிலேறிப் பாரெல்லாம்சுற்றிப்போனார்
அப்போதுநீரெழுந்து அரனுரைச்சுற்றிவந்தீர்
ஈரேழுலகமெல்லாம் இவர்தானேதெய்வமென்று
சுற்றிவந்தபாவனையை மெத்தெனவேதானறிந்து
சந்தோஷப்பட்டுமல்லோ கொடுத்தார்கனியுமக்கு
கானமயிலேறிக் கடலேழுலகமெல்லாம்
எல்லையெல்லாஞ்சுற்றிவந்து ஏமாந்தார்வேலவரும்

கர்த்தருடையகைதனிலே கனிபெற்றுவந்தவரே
கனிபெற்றுவந்தவரே காருமையாவிக்கினரே
துரோபதையாள்குறத்தைத் தொல்லுலகில்யான்பாட
பாஞ்சாலிதன்குறத்தைப் பார்தனிலேயான்பாட
பாடவருள்புரியும் பார்வதியாள்புத்திரரே
சொல்லவருள்புரியும் சிவசங்கரனுர்புத்திரரே
அருள்புரியவேண்டுமையா ஆண்டவரேயெந்தனுக்கு

முருகர் துதி

ஆறுமுகப்படைத்த அரனுர்திருமகனே
சரவணப்பொய்கைதனில் வந்துதித்தசண்முகனே
அசுரருடல்பிளக்க அவதாரமானவரே
கானமயிலேறும் கர்த்தராதுபுத்திரரே
பச்சைமயிலேறும் பார்வதியாள்புத்திரரே
புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமணவாளா வந்தெனையாளுமையா
அக்கினியில்வந்துதித்த ஆரணங்குதுரோபதையாள்
ஐவர்பஞ்சபாண்டவர்க்கு அபிஷேகப்பத்தினியாள்
பத்தினியாள்தன்குறத்தைப் பாருலகில்பாடுவதற்கு
கர்த்தராதுபுத்திரரே கடுகவந்துகாருமையா
கதைகளதுதப்பாமல் காருமையாவேல்முருகா
பாட்டுத்தவருமல் பட்சமுடன்வந்தருளும்
வாக்குத்தவருமல் வர்னமுகம்பாரும்

சரஸ்வதியம்மன் துதி

வராகவதாரங்கொண்ட மகாவிஷ்ணுதன் இடைய
நாபிக்கமலந்தனில் வந்துதித்தநான்முகனுர்
நாவிலிருப்பவளே நற்கருத்தையுண்டுபண்ணும்
மாயன்மருமகளே வந்தெனக்குமுன்னடவும்
தாயேசரஸ்வதியே சங்கரியேமுன்னடவும்
பஞ்சவர்கள்பத்தினியாள் பாவைகுறமுரைக்க
வஞ்சனைகளில்லாமல் வந்தெனக்குமுன்னடவும்
சொல்லுதவருமல் சொல்வார்த்தைகுன்ருமல்
ஏடுதவருமல் எழுத்தாணிசாயாமல்
நாவுதவருமல் நடத்துமம்மாவிக்கதையை

தப்பிதங்கள்வாராமல் சங்கரியேகாருமம்மா
கார்க்கக்கட னுனக்குக் கர்த்தா துதேவியரே
பாட வெனக்கருளும் பாரளந்தான் மருமகளே
சொல்லவருள் புரியும் சுந்தரியேயெந்தனுக்கு
கடல்வண்ணன் மருமகளே கைதொழுதுபாடுகிறேன்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

கதையின் வரலாறு

பட்டணமாம்பட்டணமாம் இந்திரப்புரிபட்டணமாம்
இந்திரபுரிப்பட்டணத்தை யிருந்தரசாளுகையில்
பட்டணத்தையாளுகின்ற பஞ்சவர்களைவருண்டு
கோணுதமாதவத்துக் குந்தியம்மாள்தாயாரும்
தோருவடி வழகி துரோபதைநாயகியும்
அருச்சுனனார்தேவியர்கள் அனைவருமொன்ருக
எல்லவருமொன்ருக இருந்தரசாளுகையில்
அத்திபுரமாளும் அரவக்கொடியோனும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்தம்பிகளும்
கருணன் சகுனியுங் காங்கேயருள்ளவரும்
சிற்றப்பாவிதுரனும் சீருள்ளமற்றவரும்
பாட்டனார்பீஷ்மரும் பாரியதுரோணருமாய்
எல்லவருமாக எல்லையுலகாளுகையில்
அத்திபுரமாளு மரவக்கொடியோனும்
அம்பலத்துவாசலிலே அனைவருக்குமேதுசொல்வார்
என்பங்காளிபஞ்சவர்கள் பாருலகமாளுகிருர்
ஐவரையும் நான் துரத்தி ஆளவேண்டுமசீமையெல்லாம்
இப்படிக்குச்சொல்லியல்லோ எழுதினன் ஓலையொன்று
விதுரனைப்போகவிட்டு ஐவரையுந்தானழைத்து
மாயத்தால்சூதாடி மண்ணுருகமண்பறித்து
மன்னர்சபைநடுவே மாதைத்துகிலுரிந்து

கொற்றவர்கள்சபையில் கோதைதுகிலுரிந்து
பண்ணுதகோலமெல்லாம் பண்ணியந்தப்பஞ்சவரை
காட்டாதகோலமெல்லாங் காட்டியந்தப்பஞ்சவரை
பன்னிரண்டுதன்வருடம் பாரவனவாசம்செய்து
பதின்மூன்றுந்தன்வருஷம் அஞ்ஞாதவாசஞ்செய்து
உருவந்தெரியாம லொளித்துமிகத்தானிருந்து
பதினாலாந்தன்வருஷம் பிறந்தபிறகாக [லே
பதினெட்டாநாளையிலே படைபொருதுஞ்சண்டையி
ஆடிப்பறக்கும் அடர்ந்தசமர்க்களத்தில்
எங்கள்முடிகளெல்லா மிறக்கும்படியடித்து
வண்ணமுடிசிந்திநாங்கள் மாண்டபிறகாக
வந்துமேநீங்களெல்லாம் வாழுமரசாண்டு
என்றுமவனுரைத்தான் எரிநாகங்கொண்டவனும்
அந்தவுரைகேட்டு ஐவர்பஞ்சபாண்டவர்கள்
ஐவர்பஞ்சபாண்டவரு மாரணங்குதுரோபதையும்
அப்படியேநல்லதென்று ஆரணியம்போய்நடந்தார்
வனமாய்வனந்தாண்டி வந்தாரிருண்டவனம்
அந்தவனத்திலே ஆணழகர்பஞ்சவர்கள்
பர்ணசாலையுண்டுபண்ணிப் பஞ்சவர்கள்தானிருந்தார்
பண்ணையதுகலவைப் பரட்டைபுளிக்கருணை
தும்பைபுளிக்கருணை தூதுவளைமுள்கீரை
கிள்ளிசமைத்துமவர் காலங்கழித்தார்கள்
இப்படியாயங்கே யிருந்தார்சிலகாலம்
மற்றுஞ்சிலகாலஞ் சென்றபிறகாக
இராமரிஷிநாவாலே நால்வருந்தான்மாண்டார்
தருமரவர்பார்த்துத் தான்புலம்பும்வேளையிலே
நாராயணர்வந்து எழுப்பினார்நால்வரையும்
ஆர்டரதுபுண்ணியத்தா லங்கேபிழைத்தார்கள்
மற்றுமொருவனத்தில் வந்துமவர்வாசம்பண்ணார்
அங்கேயும்பட்ட அவ்திகள்மெத்தவுண்டு
பத்துவருஷமுமே பட்டார்வெகுபாடு
பத்தாம்வருஷத்திலே பாஞ்சாலியேதுசொல்வாள்
ஐவரையும்தெண்டனிட்டு ஆரணங்குகேட்கலுற்றாள்
ஐவருங்கேளுங்கள் அடியேனொருவார்த்தை
அத்திபுரமல்லோ அரவக்கொடியோனும்
சீமையும்பூமியுந் தேசத்தில்நெல்விளைவும்

எப்படிக்கிருக்குதென்று நான்பார்த்துவாரேனையா
போகவிடைதாருமென்று துரோபதைகேட்கலுமே
தக்கபுகழுடைய தருமரவரேது சொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
ஐவருக்குந்தேவியரே ஆரணங்குநீர்கேளும்
பங்காளிவாசலுக்கு நீபோகநீதியுண்டோ
தாயாதிவாசலுக்குத் தனியாகப்போ லாமா
போனவிடந்தனிலே பொல்லாங்குதானடந்தால்
வந்துஎமக்குரைப்பார் ஆர்காணுமங்கையரே
சொல்லுந்துரோபதையே யென்றுமவர்கேட்க
அப்போது துரோபதையா ளாரணங்கேது சொல்வாள்
இவ்வேஷமாகவேநான் போவேனோமன்னர்களே
கொச்சைகுறத்தியைப்போல் போவேனென்மன்னர்களே
மலைக்குறத்தியைப்போலாக நான்வடிவெடுத்துப்போனா
அத்திபுரந்தனிலெனக்கு அவகேடுவந்தாலே [ல்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட மாயர்துணையாவார்
கூர்மாவதாரங்கொண்ட கோபாலர்காத்திடுவார்
போகவிடைதாருமென்று பொன்னடிக்குத்தெண்டனிட்
ஆளுலகுமன்னர் ஐவர்களுந்தான்பார்த்து [டாள்
ஆரணங்குதுரோபதைக்கு ஐவருந்தாமுரைப்பார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தபைங்கிளியே
உந்தன்மனதுப்படி உத்தமியேசெய்யுமென்றார்
உன்-சித்தத்துக்கேற்றபடி உத்தமியேசெய்யுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையாள்
அர்ச்சுனராசாவை ஆரணங்குதானழைத்து
இருவருமாகவல்லோ இளந்தோப்பில்வந்தார்கள்
உருத்திராட்சமரத்தடியில் உட்கார்ந்தாரிருவருமாய்
தோராவடிவழகி துரோபதையாள்கூந்தலதை
அருச்சுனராசரவர் அவர்கையில்தான்கோதி
சீவிச்சிணுக்கறுத்துச் சிமிழ்போலக்கொண்டையிட்டு
வாரியகூந்தலதை வண்ணமுடிகொண்டை யிட்டு
கொண்டைக்கழகாகக் குச்சிமிகச்செருகி
வகையாயிரப்பெற்ற வான்சவரியுட்செருகி
ஆயிரம்பொன்பெற்ற அணிசவரியுட்செருகி
கொண்டையின்மேல்பூவும் குடமல்லிதான்முடித்து



துரோபதை குறம்

மல்லிகை முல்லையும் மருக்கொழுந்து தான்முடித்து
ஆணழகி கண்களுக்கு அஞ்சன மையெழுதி
கமலத்திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டுமிட்டு
சீரான நெற்றியிலே திலகமிகவணிந்து
காதுக்கழகாகக் கம்மலதுசோடித்து
தந்தத்தால்கம்மல் தையலர்க்குக்காதிலிட்டார்
பக்கத்திலொன்னப்பூவும் பச்சைக்கல் நல்முருவும்
கொப்புமயிர் மாட்டி கோதையர்க்குத்தானணிந்தார்
ஒண்டிபச்சை தொங்கலிட்டு ஒருகல்புதைத்திருக்க
மூகத்துக்கழகாக மூக்குத்திதானணிந்தாள்
மாருக்கழகாக மார்பதக்கம்தாவடங்கள்
பலகரைக்கோத்ததொரு பருத்தநல்லதாவடங்கள்
அழகுப்பலகாரை அழகான தாவடமாம்
கொத்துப்பலகாரை கோவைமணித்தாவடமாம்
அக்குமணி கொக்குமணி அழகானபாலமணி
பச்சைமணிபாலமணி பலவகையானமணி
உட்கழுத்தில் கொஞ்சுமணி தரித்தாளேயுத்தமியாள்
கைகட்டுஞ்சரிவளையல் கைநிறையக்குறவளையல்
முன்கைமுழங்கை நிறையக்குறவளையல
அஞ்சுவிரலுக்கும் அழகானமோதிரங்கள்
குறவரிடமோதிரங்கள் தரித்தாளே கொம்பனையாள்
கறுப்புநல்லதட்டிசேலை கட்டினாள் துரோபதையும்
குறத்திவடிவானாள் கொம்பனையாளப்போது
ஆணழகுமன்னர் அருச்சுனரேதுசொல்வார்
தோராவடிவழகி துரோபதைநாயகமே
கொம்பனையேவுந்தனுக்குக்குறக்கூடை வேண்டுமல்லோ
கோபாலரைநினைத்தால் வருமென்றார்கூடையது
அப்போது துரோபதையாள் ஆயரைக்கைதொழுதாள்

குறம்

துரோபதை மாயவரைக் கூடைகேட்பது

தினதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தின்னாதி நாதினனா தினதெந்தினா தினனா.

மகாதேவருக்குமச்சினரே மாயவரேசுவாமி-ஐயா
வைகுந்தவாசவரே வந்தெனக்கு அருளும்
அண்டமளந்தவரே ஆனந்தரூபா-சுவாமி

துரோபதை குறம்

ஆதிநாராயணனே வந்தருளவேண்டும்
நரசிம்மவதாரங்கொண்ட ராமபத்திரசுவாமி
இலட்சுமிக்கும்மணவாளா வெனக்குவந்தருளும்
இரணியனைமார்பிளந்து வகுத்துதிரங்குடித்தீர்
ஈரேழுலகமெல்லாம் நிறைந்தவரேவாரும்
இராவணனையுடல்பிளந்து சீதைசிறைமீட்டீர்-சுவாமி
நலமானவிபீஷணர்க்குப் பட்டமதுதந்தீர்
அன்றொருநாள் திரியோதிரன் சபைதனிலேதானும்
அலறும்போதெந்தனுக்குத் துகிலாடைதந்தீர்
இன்றொருநாளெந்தனுக்கு வந்துமிகவருளி
இசைவானகுறக்கூடை யெனக்குத்தரவேணும்
நினைத்தகுறிநானுரைக்க நல்லசெம்பொன்கூடை-நல்ல
நீலவர்ணமாயவரே யெனக்குத்தரவேணும்
அவரவர் நினைத்தகுறி தானறிந்துசொல்ல
அழகானகுறக்கூடை தந்தருளவேண்டும்
ஆறுமுகப் படைத்த வேலவரேமுருகா-சுவாமி
அடிமைவள்ளிகுறக்கூடை எனக்குத்தரவேணும்
தேவேந்திரன் மகளை மணம்புரிந்தவேலவா
தெய்வானைகுறக்கூடை தந்தருளுஞ்சுவாமி
குறவரிடபெண்கொண்ட குமரேசர்முருகா
மறவரிடபெண்கொண்ட மாயவனார்மருகா
மாதுவள்ளிகுறக்கூடை யெனக்குத்தரவேணும்
அக்கினியில்வந்துதித்த ஐவருக்குந்தேவியவள்
ஆயவையும்வேலவரையும் கைதொழுதுநின்றாள்
ஏழுலகமளந்தவரும் ஈஸ்பரனார் தன்மகனும்-அங்கே
இவர்களுமனமிரங்கிக் கூடைதனையனுப்ப
வச்சிரத்தால்மாணிக்கத்தால் வாருங்கட்டுங்கூடை அது
வைடூரிய மரகதத்தால் வரம்பகட்டுங்கூடை
முத்து ரத்னப்பச்சைகளால் முழுதுங்கட்டுங்கூடை
முழுநீலமாணிக்கத்தால் அணிகள்கட்டுங்கூடை
கனத்தநல்லகுறிசொல்லுங் காட்சிதருங்கூடை அது
கைலாசவீஸ்பரனார் காட்சிபெறுங்கூடை
இத்தனைக்குநலமான கூடைதன்னையெடுத்து-அவர்
ஏகறவிட்டார்பாஞ்சாலி கையில்விழவென்று
அந்தநல்லகூடையது ஆகாயஞ்சுற்றி-அது
ஆணழகிகைதனிலே வந்துவிழுந்தது

வேறு

ஆதிநாராயணரை அடிவணங்கித்தெண்டனிட்டு
திருத்தணிகைவேலவரைத் தீர்க்கநமஸ்கரித்து
கூடையதுவாங்கிக் கொம்பனையாளப்போது
வச்சிரமணிக்கூடைக்குள்ளே வைத்தாள்பலவகைகள்
மருந்துவகைகளிலே மலைவேப்பங்கொட்டைவைத்தாள்
புலியினது நகமும் புகழானவேர்வகையும்
நரிப்பல்நரிமுகமும் நல்லமருந்துகளும்
ஆண்வசியம்பெண்வசியம் ஆனமருந்துகளும்
புதுமையுள்ள ஆண்பெண்ணுக்கிளமைவரமருந்துகளு[ம்]
முகங்கொண்ட சன்னிதீர மூலமலவேப்பம்வேர்
பல்நோவும்தந்தவாய்வும் தீரமருந்துவகை
மார்நோவும்பித்தவாய்வும் மாளநல்லவேர்வகைகள்
வயிற்றுவலிதனக்கு ஏற்றமருந்துவைத்தாள்
கால்வலிகைவலிக்குக் கனத்தமருந்துவைத்தாள்
பட்டோலைதன்னுலே முடைந்தகிலுகிலுப்பை
ஈச்சங்குருத்தோலை யிசைந்தகிலுகிலுப்பை
தாழங்குருத்தோலை தகுந்தகிலுகிலுப்பை
கொடிக்கயிறுதாம்புக்கயிறு குழந்தைகட்டேணைக்கயிறு
அடுக்கநிலவுரிகள் அழகானசிற்றுரிகள்
புரிமணைகள்சும்மாடு பிரப்பங்கோல்தானமைத்தாள்
எண்ணைக்குடுக்கைகளும் ஈச்சங்கோல்தாழைநாரும்
பார்த்துக்குறியுரைக்கப் பலகாரகட்டுகளும்
கண்டுகுறியுரைக்கக் கனந்தவேர்மூலிகையும் [யிலே
இத்தனையுங்கொண்டுமல்லோ எடுத்தமைத்தாள்கூடை
கட்டுவச்சிபோலாக பக்கத்தில்கூடைவைத்தாள்
இடப்பக்கம்கூடைவைத்து வலக்கையில்கோல்பிடித்து
மலைக்குறத்தியைப்போலே மாதுமிகவெழுந்தாள்
அன்னநடை துரோபதையாள் அசைந்துநடக்கையிலே
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
குறத்தியருகில்வந்து கோபாலர்மச்சினரும்
குஞ்சிரிப்புக்கொண்டுமவர் குலுங்கநகைநகைத்து
கட்டியணைத்துக் கனிவாயைமுத்தமிட்டு
சேர்த்துமவரணைத்துச் செங்கனிவாய்முத்தமிட்டு
காண்டாவனமெரித்த காளையவரேதுசொல்வார்

தருமரும்வீமருமே தம்பிமாரிருவர்களும்
காணவேண்டுமென்று கட்டழகிவாருமென்றான்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதுரோபதையும்
அப்படிக்கேநல்லதென்று ஐவருக்குமுன்னேவந்தாள்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அருங்கிளியைத்தான்பார்த்து
சந்தோஷப்பட்டுமல்லோ சரீரங்கள்பூரித்து
நீலக்குழலாட்கு நிலங்கிள்ளிக்காப்புமிட்டு
ஐவருங்கூடியல்லோ ஆரணங்குக்கேதுசொல்வார்
அனலிற்பிறந்தவளே அபிஷேகப்பத்தினியே
மலைக்குறத்திபோலே வடிவெடுத்துநீபோராய்
போரவிடந்தனிலே பொல்லாங்குநேர்ந்தாலே
சொல்லுமிடந்தனிலே தீவினைகள்வந்தாலே
ஆரைநினைத்திடுவாய் ஆரணங்கேசொல்லுமென்றார்
எவரைநினைத்திடுவாய எந்தனுக்குச்சொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குஏதுசொல்வாள்
பங்காளிசீமையிலே பாங்காகவந்துநேர்ந்தால்
மன்னர்சபைநடுவே மாளாத்துகிலளித்த
மாளாத்துகிலளித்த மாயவர்வந்துகாத்திடுவார்
ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஆயர்வந்துகாத்திடுவார்
என்றுமவளுரைத்த ஏந்திழையாளேதுசெய்தாள்
சகாதேவராசாவைச் சடுதியிலேதானழைத்து
அருகில்நிறுத்தியல்லோ ஆண்டவரைக்கைதொழுதாள்
மாபலிக்குமண்ணளந்த மாயவரேநான்சரணம்
ஆனைமுறையிடவே அன்றுவந்துகாத்தவரே
காளிங்கநல்மடுவில் காணுய்ந்தசர்ப்பத்தில்
கூத்தாடிநின்றவரே கோவிந்தாவந்தருளும்
மோகினிவேஷங்கொண்டு முக்கண்படைத்தவர்க்கு
காமங்களுண்டுபண்ணுங் கரிமுகவாவந்தருளும்
மாதுநான்வருந்துகையில் மாயவரேவந்தருளும்
கோதைநான்வருந்துகையில் கோபாலாவாருமையா
என்றுமவள்முறையிடவே யெம்பெருமாள்தானறிந்து
கருடன்மேலேறியல்லோ கோபாலரும்வாராரே
வட்டமாங்கருடனேறி வந்துவிட்டார்மாடவரும்
பாஞ்சாலியருகில்வந்து பாரளந்தாரேதுரைப்பார்
ஏதுக்கெனையழைத்தாய் என்பிறப்பேதங்கையரே
அழைத்தநல்லகாரியத்தை ஆரணங்கேசொல்லுமம்மா

அப்போ துரோபதையாள் ஆயருக்கே துசொல்வாள்
அத்திபுரம் நான்போய் ஐயரையும்பார்க்கவே ணும்
மலைக்குறத்திவேஷங்கொண்டேன் மைந்தாருகில்லை
கைக்குழந்தைவே ணுமென் ருள் கரிமேக அண்ணுவே
ஐவர்க்கிளையவரை அர்ச்சுனனுர்தம்பியரை
சாயாம்பூமேனியரை சகாதேவராஜாவை
எனக்குக்குழந்தையாக எம்பெருமாளுண்டுபண் ணும்
கைக்குழந்தைபோலேயல்லோ கரிமேகாவுண்டுபண் ணு
என் றுமந்தப்பாஞ்சாலி எம்பெருமாளைக்கேட்க [ம்
மாயர்மனமிரங்கி மை ந்தர்வடி வுதந்தார்
அருச்சுனனுர்தம்பியரை ஆண் குழந்தையாக்கிவிட்டார்
இளையசகாதேவன் ஏந்துங்குழந்தையானுன்
மாயருளாலே மைந்தன்வடிவுகொண்டான்
கோபாலர்தன்னருளால குழந்தைவடிவெடுத்தான்
அப்போ துரோபதையாள் ஆயரைக்கைதொழுது
மாயர்பதம்பணிந்து மைந்தனைத்தானெடுத்து
மலைக்குறத்திபோலாக கட்டிஞள்பாலகனை
கூடையிடுக்கிவைத்தாள் குழந்தைமுதுகணிந்தாள்
கையில்பிரப்பெடுத்து கட்டுவச்சிபோலாக
பொன் னுமலைக்கட்டுவச்சி போலேயவள் நடந்தாள்
அன்ன நடை நடந்து அருங்கிளியாள்போகலுற்ருள்
பஞ்சவரும் மாயவரும் பார்த்துமனமகிழ்ந்தார்
காரிகையாள் நாயகியைக் கண்டுமனமகிழ்ந்தார்
தோராவடி வழகி துரோபதையாளப்போது [ள்
ஐவருக்கும்மாயருக்கும் அடிவணங்கித்தெண்டனிட்டா
போகவிடைதாருமென் று பொன்னடிக்குத்தெண்டனிட்
ஐவர்களுந்தான்பார்த்து அழகாகவேதுசொல்வார் [டார்
காரிகையாள் துரோபதைக்கு கண் ணெச்சலாகுதென் று
ஏழுலகமாளுகிற எம்பெருமாளப்போது
பூமியைக்கிள்ளியல்லோ பொட்டிட்டார்துரோபதைக்கு
திருஷ்டிசுழற்றியவர் தெருவெங்கும்விட்டெறிந்தார்
மாயவரும்ஐவரும் மனமிகக்குளிர்ந்து
போய்வாருமென் றுசொல்லிப் புகழவிடைகொடுத்தார்
விடைபெற்றுப்பாஞ்சாலி விடுபட்டாளந்நேரம்
போராளே துரோபதையாள் பூமணக்கவேர்மணக்க
மைந்தனைமுதுகணிந்து மயிலனையும்வாராளே

குழந்தைமுதுகணிந்து கூடையிடுப்பில்வைத்து
பிரப்பங்கோல்கைபிடித்து பெருமையுடன்வாராளே
இஞ்சிவனந்தாண்டி யெலுமிச்சஞ்சோலைவிட்டு
மஞ்சள்வனந்தாண்டி மாதுளம்பூச்சோலைவிட்டு
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
காரைபெருத்தவனம் காட்டுக்களாப்பூத்தவனம்
சூரைமுளைத்தவனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
அல்லியுந்தாமரையும் அடர்ந்தவனந்தாண்டி
கோகிலமந்தாராவுங் குலாவும்வனந்தாண்டி
அன்னமுந்தாராவும் அலையும்வனந்தாண்டி
அத்திபுரந்தேடி வந்தாளே ஆணழகி
தாமமுடியாளும் தல்லாடன்வீதிவிட்டு
கட்டழகிதுரோபதையாள் கர்னராதுவீதிவிட்டு
சாமத்துரோகியல்லோ சகுனியதுவீதிவிட்டு
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்வீதிவிட்டு
பேடைமலர்க்கண்ணாள் பெருந்திருவாள்வீதிவிட்டு
அந்தத்தெருக்களிலே வாழ்கின்றமன்னரெல்லாம்
இளமைமுதுமையுள்ளோ ரெல்லோருந்தான்சேர்ந்து
வயதுசென்றமன்னர்களும் வாலிபவீரர்களும்
எல்லாருமொன்றாக இவளைவந்துசூழ்ந்தார்கள்
நரைத்தபழுங்களெல்லாம் நாடிவந்துஏதுசொல்வார்
கானக்குறத்தியரே கட்டுவச்சிநாயகமே
மலையிற்குறத்தியரே மயிலனையேநாயகமே
எங்களதுமாளிகைக்கு ஏகிவந்தாயாமாகில்
வர்ணமான்மாளிகைக்கு வந்திருந்தாயாமாகில்
நீர்–ஆடுங்கழலாடி அம்மானைதானாடி
பந்தாடிசெண்டாடி பல்லாங்குழலாடி
ஓலைக்கால்மண்டபத்தில் ஊஞ்சல்மிகவாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளியேவீற்றிருப்பாய்
சொக்கட்டான்சூதாடி சுகமாகவாழ்ந்திருப்பாய்
எங்களதுபெண்டுகளை உனக்கேவல்செய்துவைப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் ஆனபணிசெய்திருப்போம்
தேவாமிர்தம்நீ தேவையென்றுசொன்னாலும்
கொண்டுவந்துதான்கொடுத்துகும்பிட்டுவீற்றிருப்போம்
பாலும்பழமுமுண்டு பஞ்சணைமேல்படுத்து [போம்
கட்டிலின்மேல்வீற்றிருந்தால் கால்பிடித்துநாமிருப்

பஞ்சணையின்மேல் நீயிருந்தால் உன்பாதம்பிடித்திருப்
மனையாளதுவார்த்தை மாயமாய்க்கேட்டதில்லை [போம்
பெண்களதுவார்த்தை பிரியமென்றுகேட்டதில்லை
உன்சொல்லைமேலாக வெண்ணிமிகநடப்போம்
உன்பனதுக்கிசைந்தபடி நடப்பேண்டிகட்டுவச்சி
வாராயோபெண்மயிலே என்றுமவருரைத்தார்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குவதுசொல்வாள்
மலைக்குறத்திபோலாகு மயிலணையாளேதுசொல்வாள்
கூவுங்குயில்போலே கொம்பனையாளேதுரைப்பாள்
வாய்திறந்துமன்னருக்கு மறுவார்த்தைசொல்லுகிருள்
இன்னம்பலமிருகங்கள் எடுத்துக்கறிசமைப்போம்
ஏச்சானஜாதியல்லோ எங்கள்குறச்சாதி
நல்லகுலந்தனிலுதித்த ராசாக்களுமானல்
நாட்டிலுள்ளகுறத்திகள்மே லாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்ருெருவன் நத்திவந்தானுனல்
உலகளந்தார்தன்னருளால் சுவர்க்கமில்லையென்பார்கள்
குருவினதுபத்தினியைக் குறித்துவந்தானுனல்
கோபாலர்தன்னருளால் கூடுமென்பார்தன்னரகம்
அண்ணனதுதேவியாரை அடுத்துவந்தானுனல்
அரிராமச்சக்கரமே அவன்தலையையறுக்கும்
இப்படியாயுரைப்பார்கள் ஏழுலகந்தன்னிலே
எல்லாநீரறிந்தவர்கள் எனைத்தொடலாமோ
கொற்றவரேயுங்களுக்குத் தேவியர்களில்லையோ
கூசாமலுங்களது மனையிடத்துச்சேரும்
ஏன்காணும்மன்னர்களே யிப்படிக்குச்சொன்னீர்
என்குறவன்தானறிந்தால் ஏதுபிழைவருமோ
குலமன்னர் நீங்களானல் குறத்தியைப்பார்த்து
ஐவராணசெந்தருவ ரெனக்குமணவாளர்
அவரறிந்தால்பழுது அரசர்களேபோம்போம்
எந்தனுக்குஏவல்செய்து எனையாளவந்தீர்
ஏவல்பணிசெய்வதற்கு எட்டுலட்சமுண்டு
ஏழுபேர்எந்தனுக்குச் சக்களத்திமார்கள்
இன்னமுண்டுஎன்கணவனுக் கெண்ணத்தொலையாது
எங்களதுகுறத்திசாதி ஏச்சானசாதி
எங்களுக்குமேலான அரசர்களேகேளும்
வெள்ளெலிக்கறிசமைத்து விருந்துகளைச்செய்வோ

விஸ்தார ஆமையுடன் கீரிப்பிள்ளை தின்போம்
கொக்குநாரையுடனடித்துக்கொண்டு கறிசமைப்போம்
கொண்டுமுசல்தான்பிடித்து கொழுப்புகள் செய்வோம்
காட்டெருமைபன்றியுடன் கறிசமைத்துத்தின்போம்
கண்டகண்ட மிருகமெல்லாம் உப்புக்கண்டமிடுவோம்
பெருச்சாளிதான்பிடித்துப் பொரியலது செய்வோம்
பெரும்பூனையதுபிடித்து விருந்துசெய்வோம்நாங்கள்
பாம்புதின்போம்பல்லிதின்போம் பச்சோணான் சுடுவோ
பலதினுசுமிருகங்கள் எடுத்துக்கறிசமைப்போம் [ம்
ஏச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
நல்லகுலந்தனிலுதித்த ராஜர்களுமானால்
நாட்டிலுள்ளகுறத்திகள்மேலாசைவைக்கலாமோ
ஒருவன்பெண்டைமற்றொருவன் நத்திவந்தானானால்
உலகளந்தார் தன்னருளால் சுவர்க்கமில்லையென்பார்
குருவினது பத்தினியைக் குறித்துவந்தானானால்
கோபாலர்தன்னருளால் கூடுமென்பார் நரகம்
அண்ணனது தேவியரை அடுத்துவந்தானானால்
அரிராமர்சக்கரமே அவன் தலையையறுக்கும்
இப்படியுரைப்பார்கள் ஏழுலகந்தனிலே
எல்லாம்நீரறிந்தவர்கள் எனைத்தேடலாமோ
கொற்றவரேயுங்களுக்கு தேவியர்களில்லையோ
கூசாமல்வுங்களிட மனையிடத்துச்சேரும்
மன்னர்களே வுங்களுக்கு மனையாளுமில்லையோ
மகாராசர்பிள்ளைகளே மனையிடத்திற்போம்போம்
கிரிதின்னுங்குறத்தியின்மேல் ஆசைகொண்டீர் நீங்கள்
கீர்த்தியல்லவுங்களுக்கு எழுந்துநடப்பீரே
ஆடைதின்னுங்குறத்தியின்மேலாசைகொண்டீர் நீங்க
அதுமுறைமையல்லகண்டீர் அணுகாமல்நடவும் [ள்
என்றுமவள்மிகவுரைத்து இணைவிழியால்மிரட்டி
இளங்குறத்திசாயலைப்போல் இடைதுவள நடந்தாள்

வேறு

அப்போது பூங்குறத்தி அழகான நட்டுவச்சி
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
மலைக்குறத்திபோனபின்பு மன்னர்மனந்தளர்ந்து
நெஞ்சுலர்ந்துநாவறண்டு நினைவுதடுமாறி
அவரவர்கள்தொழில்மறந்து அசைந்துநடைநடந்து

சாதித்தொழில்மறந்து தானேகிடக்கசந்து
பூவைத்தொழில்மறந்தார் புஷ்பமெடுக்கவந்தார்
இருந்தவிடமொழிய எழுந்துநடக்கறியார்
கானக்குறத்தியினல் காமம்பெரிதாகினர்
வாய்ப்பேச்சுதான்குளறி மயங்கிவிழுந்தார்கள்
தங்கள் நினைவுகெட்டுத் தான்படுத்தார்பூமியிலே
இப்படியாகவல்லோ இவ்விருக்கும்வேளையிலே
அப்போதுபூங்குறத்தி அந்தத்தெருதாண்டி

கருணன்வீதி வருகிறது

கருணாதுவீதியிலே கட்டுவச்சியேதுசொல்வாள்
வாரதொருபூங்குறத்தி மயில்போலவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பின்கிளியதுபோல்
இவ்வீதிவாழுகிற இளவிசையர்பெண்களே
கைபார்த்துக்கொள்ளலையோ கனத்தகுறிகேட்கலையோ
பச்சையதுகுத்திக் கொள்ளலையோபைங்கிளிகாள்
உரிகயிறுவாங்கலையோ ஊஞ்சல்கயர்கொள்ளலையோ
தாம்புக்கயிறுகொள்ளலையோ தார்வேந்தர்வீதியிலே
ஓலகிலுகிலுப்பை கொள்ளலையோபிள்ளைகட்கு
ஐங்காயத்தூளதுதான் வாங்கலையோ ஆச்சியரே
பல்நோவுக்காருக்குப் பச்சிலைகள்கொள்ளலையோ
இப்படியாய்க்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி
அப்பெரியவீதியிலே வாழுமனிதரெல்லாம்
சிறியோர்கள்பெரியோர்கள் சேர்ந்தாரொருபுறமாய்
வாலைப்பிராயமுள்ள ராசரெல்லாந்தான்பார்த்து
காமக்குறத்தியரைக் கண்டுமயலானர்
பாவைக்குறத்தியரைப் பார்த்துமிகவணங்கி
குறத்தியழகைப்பார்த்துக் கொற்றவர்களேதுசொல்வார்
கண்டீரோமன்னர்களே காமக்குறத்தியைப்
பார்த்தீரோராசர்களே பாவையழகுதன்னை
இப்படியாய்ப்பெண்டுகளை எங்கிலும்நான்கண்டதில்லை
தெய்வலோகம்வாழுகின்ற இந்திராணியீடல்லவே
இராமரதுதேவி சீதையெதிரல்லவே
அகலிகைமண்டோதரி யாருமெதிரல்லவே
இரம்பையூர்வசி நல்லதிலோர்த்தமையும்
தானியமாலியரும் தருந்தகருணவதியும்

குறவா துகூட்டமெல்லாம் அடியோடேவந்து
கொற்றவனூர்சீமைதனைச் சுட்டெறியப்போகிறூர்
குறச்சாதியென்சாதி இழிவானசாதி
கொற்றவரே நாணுமக்குக் கட்டுமோதான்சொல்லும்
குறநாற்றமுங்களுக்குக் குமட்டியடியாதோ
கொம்பனையாள் மேலாசைதோன்றுதோதான்சொல்லும்
கருணாதுவீதிதனில் அதர்மங்களுண்டாச்சோ
கட்டழகர்கூடியே யென்கைபிடிக்கவந்தார்
கருணரிதைத்தானறிந்தால் கடும்பகைகள்நேரும்
காளைகளேயுங்களுக்கு குடிபழுதுவருமே
இச்சையுடன்தெருவில் பிச்சைக்குநான்வந்தேன்
எந்தனையும்நீங்களெல்லாம் பெண்டழைக்கலாமோ
சமுசாரியானவளை வாதாடியேபெண்டழைத்தால்
தன்குடிக்குப்பழுதுவருமென் றெண்ணிநடவும்
ஒருவனதுதேவிதன்னை ஒருவனத்திலழைத்தால்
உடனேயவன்தலைக்குப் பழுதுவருமென்றூர்
பிறருடையபெண்டுகளைப் பேதப்படநினைத்தால்
பெருநரகமடைவாரென்று பெரியோர்சொல்லுவார்கள்
இப்படியாயுலகுதனில் அறிவழிந்தமாந்த
ரெத்தனையோகோடியுண்டு எனக்குத்தெரிந்தளவும்
ஸ்ரீராமர்தன்னுடைய தேவியருளாலே
தென்னிலங்கைராவணனும் க்ஷணத்தில்மடிந்தானே
அகலிகைதன்னாலே ஆயிரங்கண்ணுடையான்
அவளாசைதன்னாலே பூனைபோல்கடந்து
உள்நுழையும்வேளையிலே கௌதமருங்கண்டு
ஒப்பாதமனங்கொதித்து மெய்யுடனேயவரும்
தேவேந்திரனென்றறிந்து சீறியந்தமுனியும்
சீக்கிரமாயவன்கேட்ட வாக்குரைத்தாரவரும்
இந்திரன்தன்திரேகமெல்லாம் யோனியாகவென்று
இட்டாரேபெருஞ்சாபம் எல்லையுலகறிய
கௌதமர்சாபத்தினால் இந்திரனும்நொந்து
கிலேசங்கொண்டவருடைய பாதத்தில்விழுந்தான்
சாஷ்டாங்கதெண்டனிட்டுச் சரணமென்றுபணிந்து
சுவாமியென்னைக்காருமென்று மிகவணங்கியுரைத்தான்
என்றுமிவன்தானுரைக்கக் கௌதமருமிரங்கி
இந்திரனர்தேகமெல்லாம் விழியாகவென்றூர்

இந்தக்குறத்திக்கு ஈடுசொல்லலாகாது
காமக்குறத்திக்குக் கட்டுரைக்கலாகாது
இவளழகும்பாவனையும் எங்கிலும்கண்டறியோம்
திருவழகும்பாவனையும் எங்கிலும்கண்டறியோம்
இப்படியாய்ச்சொல்லியல்லோ எல்லவருமோடிவந்து
மாலைக்குறத்தி மலைக்குறத்திமுன்னே வந்தார்
கானக்குறத்திமுன்னே வந்துமவரேதுசொல்வார்
ஆரடிகட்டுவச்சி அன்னமேபூங்குறத்தி
எவளோடிகட்டுவச்சி யிந்தத்தெருவில்வந்தாய்
உன்னழகைக்கண்டல்லோ உருகுதடி எங்கள்மனம்
உன்-வடிவழகைக்கண்டல்லோ மடங்கித்தவிக்கிறோம்
எங்களதுமாளிகைக்கு வந்தாயேயாமாகில்
கட்ட நல்லபட்டுமுண்டு கழற்றப்பணிதியுண்டு
போடவுடையையுண்டு பூட்டப்பணிதியுண்டு
அத்தருண்டுபுட்பமுண்டு அதற்கேற்றகட்டிலுண்டு
பூசப்புனுகுமுண்டு புகழானகந்தமுண்டு
அன்னவூஞ்சல்மேலே ஆடலாமெப்போதும்
உன்னைப்பிரியாமல் உகந்துவிளையாடிருப்போம்
ஏவல்பணிசெய்து எப்போதும்வீற்றிருப்போம்
ஏன்காணும்கட்டுவச்சி இளங்குறத்திநாயகமே
வாராயோஎங்களுடன் வர்னமணிமாளிகைக்கு
என்றுமவர்கேட்க இளங்குறத்திகட்டுவச்சி
மலையாளப்பூங்குறத்தி மன்னவருக்கேதுசொல்வாள்

குறம்

ஏன்காணும்மன்னர்களே யிடக்குகளைச்சொன்னீர்
இந்நாட்டில்வாழுகின்ற குறத்தியல்லகாணும்
பலசாதிகுறத்தியைப்போல் எண்ணியேதாமுரைத்தீர்
பரமசிவன்பார்வதிக்கும் கைபார்க்குங்குறத்தி
கானகத்தில்வாழுகின்ற குறத்தியைப்போல்நினைத்தீர்
கந்தருக்கும்வள்ளிக்கும் கைபார்க்குங்குறத்தி
இந்நாட்டில்வாழுகின்ற குறத்தியல்லநானும்
இந்திரற்குந்தேவியர்க்கும் குறியுரைக்குங்குறத்தி
என்னையறியாமல் அனியாயஞ்சொன்னீர்
இந்நாட்டுகுறத்தியைப்போல் இடைந்துநடப்பீரே
என்குறவருமமைக்கண்டால் இப்பொழுதுதன்னில்
இந்தக்ஷணமுங்கள்மண்டை யுருளஅடித்திடுவார்

அன்றுமுதலின்றளவும் கௌதமனார்வசையால்
ஆயிரங்கண்ணிந்திரனு ரென்றுசொல்லுமுலகம்
தேவேந்திரன்போனபின்பு கௌதமனார்தாமும்
தேவியரைத்தானழைத்து மிகவுரைப்பாரவட்கு
ஏண்டிபெண்ணேயகலிகையே இந்தமதியுனக்கு
இந்திரன்தன்மேலாசை கொண்டிருந்தாயென்றார்
அந்தவுரைகேட்டுமவள் பயந்துமிகத்தயங்கி
ஆண்டவனேயான்செய்த குற்றமதைக்கேளும்
நித்திரையாலெந்தனுக்கு நினைவுதடுமாறி
நீரென்றுயாரென்று நானறியேனென்றாள்
என்றுமவள்தானுரைக்கக் கௌதமரும்வெகுண்டு
இவளையொருகற்பாறை யாகவென்றுசபித்தார்
இட்டதொருசாபத்தினால் அகலிகையும்பார்த்து
ஆண்டவரேயென்குருவே ஐயாவேசுவாமி
அடியாள்நான்செய்ததொரு குற்றம்பொறுத்தருளும்
இட்டதொருபெருஞ்சாபம் எப்பொழுதுதீரும்
எந்தனுக்குரையுமென்று மிகநோக்கிப்பணிந்தாள்
என்றுமவள்தானுரைக்க மிகமனதில்மகிழ்ந்து
ஈரேழுலகமெல்லாம் ஆளுந்தசரதனார்
ஸ்ரீராமர்தசரதர்க்குப் புத்திராய்ப்பிறந்து
செல்வமுள்ளபன்னிரண்டு வயதுடையநாளில்
இராஜரிஷியானவரும் ஆகாததுவுணர்ந்து
தசரதனார்தன்னருகே தேடியவர்வந்து
ஸ்ரீராமலட்சுமணரை அனுப்பவென்றுகேட்க
சுந்தரமானலட்சுமணரை ஸ்ரீராமர்தனையும்
சுந்தரமானலட்சுமணரை இருவரையுமனுப்ப
இராஜரிஷிமனமகிழ்ந்து நலமாகநடந்தார்
இராமருமலட்சுமணரும் கூடவேதான்தொடர்ந்தார்
இராஜரிஷிதன்னுடனே மூவருமாய்வந்து
இராமருடன்லட்சுமணரும் வாசஞ்செய்தாரங்கே
இவரிருக்கும்வேளையிலே தாடகைதான்வந்தாள்
இவளாரெனவுரைத்தார் ஸ்ரீராமர்தானும்
எடுத்துரைப்பாரந்நேரம் இராஜரிஷிதானும்
என்னுடையயாகமதைக் கலைக்கவந்தபீடை
இவளுயிரைவாங்குமென்று உரைத்தாரந்தரிஷியும்
குருவுரைத்தவாக்கியத்தைக் கோபாலரறிந்து

கொப்பெனவேலையிலெடுத்துக் குணத்தொனிசெய்து
தாடகையைவிழவடித்து மாரீசன் தன்னை
தகைமையுடனுயிர்வதைத்து தன்மையுடனடந்தார்
விஸ்வாமித்திரர்தன்னுடனே வேண்டியிருவர்களும்
விஸ்தாரமானதொரு வழிநடந்தார்மூவர்
திவலைப்பதிநோக்கியல்லோ வருகின்றவழியில்
மிதித்தாரேயகலிகையாள் கற்பாறைதன்னை
பாதம்பட்டவுடனே அவள்மேதினியிலெழுந்து
பத்தியுடன்சுற்றிவந்து நமஸ்கரித்தாளந்நேரம்
இராகவருந்தான்பார்த்து இவளாரென்றுரைக்க
இராஜரிஷியானவரும் இராகவருக்குரைத்தார்
அப்போதுவகலிகையும் அண்டமெல்லாம்புகழ
ஆனந்தமாகவந்து கௌதமரைப்பணிந்தாள்
அகலிகைகௌதமருங் கூட்டமுடன்வாழ்ந்து
கோபாலர்போலுஞ்சில பிள்ளைகளும்பெற்றார்
இப்படியாயுலகுதனில் எத்தனையோகோடி
எந்தனைப்பெண்டழைக்கவந்தீர் மன்னர்களேபோம்போ
ஆணலேகெட்டவர்கள் ஆருமில்லையுலகில் [ம்
அவகேடுபெண்ணாலே வருமென்றுசொல்லுவார்கள்
இப்படிக்குத்தானுரைத்து இணைவிழியால்மிரட்டும்
இளங்குறத்திதனைப்போலே யிடைதுவளநடந்தாள்

வேறு

குறத்தியவள்போனபின்பு கொற்றவரெல்லாரும்
மாதுமயலாலே வாடிமனந்தளர்ந்து
தையல்மையலாலே தங்கள்முகம்வாடி
காமன்கணையாலே களைபட்டுப்போய்விழுந்தார்
நினைவுதடுமாற நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து
படுத்தபந்நிக்கைவிட்டார் பார்மன்னரெல்லவரும்
குறத்தியவளாலே கொற்றவர்போய்ப்படுத்தார்
மலைக்குறத்திதன்னாலே மனதைமறந்தார்கள்
கட்டுவச்சிதன்னாலே கைகாலசந்தார்கள்
தங்கள்குலத்தேவிதன்னைத் தான்மறந்தாரப்போது
ஒருவர்பேருரைப்பார்கள் மறுபேரழைப்பார்கள்
உணர்வுதடுமாறி நிலத்திலங்குபூமுடியார்
திண்டிமறந்து தெருத்திண்ணைபோய்ப்படுத்தார்

குறத்திகுறத்தியென்று கொற்றவர்கள் தாமிருப்பார்
மலேக்குறத்திவந்தாளென்று மன்னரெழுந்திருப்பார
கட்டுவச்சிவந்தாளென்று கண்ணெடுத்துப்பார்த்திருப்ப [ர்
குறத்திகுறத்தியென்று குலேகுலேவார்மன்னரெல்லாம்
இப்படியாக இருக்குமந்தவேளேயிலே

திரியோதிரன்வீதி வருகிறது

மாலேக்குறத்தியவள் மலேக்குறத்திகட்டுவச்சி
வேலேப்பழித்ததொரு விழியாள்நடக்கலுற்ருள்
தேசத்தையாளுமந்தத் திரியோதிரன்வீதியிலும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்வீதிவந்தாள்
வரும்குறத்தியவள் மயில்போலேவாய்திறந்து
கூறுவாள்கட்டுவச்சி கொம்பினதுகிளிபோல்
உரிக்கயிறுவாங்கிலேயோ உத்தமியேபெண்டுகளா
சவுரிமயிர்கொள்ளலேயோ தார்வேந்தர்பெண்டுகளா
மாப்பிள்ளேக்கேற்ற மருந்துண்டுகொள்வீரோ
புருஷருக்கேற்ற பொடியுண்டுவாங்குவீரோ
என்றுமவள்கூறியல்லோ வாராளேகட்டுவச்சி [த்து
அப்போ-திரியோதிரன்வீதியிலே சிலமன்னர்தான்பார்
காமக்குறத்தியரைக் கண்டுமையலாகி
இவளார்காண் கட்டுவச்சி இவ்வீதிவந்தாள்காண்
கட்டுவச்சிபோலழைக்க கண்டீர்களோமன்னர்களே
இந்நாட்டுக்குறத்தியல்லோ இவ்வீதிவந்தாள்காண்
மேல்நாடதனில்வாழும் குறத்தியைப்போல்காணுது
கெந்தருவர்தேவர்களோ காமனதுபத்தினியோ
தேவேந்திரனுடைய திருவுளத்தால்வந்தவளோ
ஈஸ்வரனுர்தன்னிடத்தில் இருக்குங்குறத்தியரோ
பார்வதியாளம்மனுக்குப் பார்த்துகுறிசொல்பவளோ
இலட்சுமியாள்தனக்கு நேர்ந்தகுறிசொல்பவளோ
ஐயன்பிரமதேவருக்கு ஆனகுறத்தியரோ
சரஸ்வதிநாயகிக்குச் சகுனகுறிசொல்பவளோ
மயிலேறும்வேலவர்க்கு மனதுகுறிசொல்பவளோ
தெய்வானேவள்ளியர்க்குத் தேர்ந்துகுறிசொல்பவளோ
இவளழகைப்பார்ப்பதற்கு இருகண்கள்போதாது
புஸ்தகத்தைமாறடிக்கும் புறங்காலின்வடிவழகும்
பூஞ்சிலம்புதண்டைகளும் புலம்பும்நடையழகும்
முத்துச்சிப்பிதன்னிறம்போல் முழங்காலிரண்டழகும்

ஈணுதவாழை யிளவாழைத் தண்டதுபோல்
இளவாழைத்தண்டதுபோல் இருதுடையினழகும்
ஆலிலைபோலே அமைத்தவயிறழகும்
குறும்பிநுழையாத குப்பத்தின் மயிரழகும்
கோத்தமுத்திலேதளர்ந்த கொங்கையிரண்டழகும்
முருக்கம்பூவிதழ்போல் உதட்டழகும்பாவனையும்
முத்தணிந்தபல்லழகும் முத்தழகுமொப்பனையும்
வட்டமுகமும் முகராசிகண்ணிறமும்
வண்ணத்திருத்தோளும் கோத்தபணியழகும்
அவனிபதினாறு லோகந்திரிந்துவந்தோம்
இவளழகுக்கொப்பானர் யாருமுலகிலில்லை
என்றுமிவர்கள்வந்து எடுத்துரைப்பார்குறத்தியர்க்கு
குறத்தியருகில்வந்து கொற்றவர்களேதுசொல்வார்
வாடிகுறத்தியெங்கள் வர்ணமணிமாளிகைக்கு [வோம்
கால்பிடிப்போம்கைபிடிப்போம் கனத்தபணிசெய்திடு
வேண்டியுன்னைதொழுது வேணபணிசெய்திருப்போம்
ஆணாய்ப்பிறந்தவர்கள் அடப்பங்கட்டி நின்றிடுவோம்
பெண்ணாய்ப்பிறந்தவர்கள் வேணபணி செய்திருப்போம்
ஆருங்காய் நீராடி அம்மானைதாடி
பந்தாடிச்செண்டாடி பள்ளாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தில் பைங்கிளிபோல்வீற்றிருப்பாய்
பளிங்குமாமண்டபத்தில் பாங்காய்வீற்றிருப்பாய்
உந்தன்மேலாசைகொண்டு உழன்றுதிரிகிறோம்
பூங்குறத்தியுன்னாலே பெண்பிள்ளை தாம்மறந்தோம்
உன்னாசைகொண்டுமல்லோ சன்னியாசியானேமே
தாயைமறந்தோமடி சகலரையுந்தான்மறந்தோம் [லாம்
வாடி குறத்தியென்று மையல்கொண்டார்மன்னரெல்
அப்போதுகுறத்தியவள் அக்கினிபோல்வாய்திறந்து
மன்னர்முகம்நோக்கி மலைக்குறத்தியேதுசொல்வாள்

குறம்

வாடியென்றும்போடியென்றும் வழிமறித்துஎன்னை
வம்புந்தும்புஞ்சொல்லவந்தீர் மன்னர்களேபோம்போ
நாற்பெருவர்வீட்டியிலே வேற்றுமைதானுமுண்டோ [ம்
நுட்பமறியாமலென்னைச் சொற்பமென்றுமதித்தீர்
கலியாணஞ்செய்யலையோ காளைகளேயுமக்கு [கள்
கன்னியின்மேல்குறத்தியின்மேல்மையல்கொண்டீர் நீங்

ஒழியாதநரகமெல்லாம் மறைநூலில்சொல்லும்
அண்ணன் தம்பிதேவியர்மேலாசைகொள்வீரானல்
ஆகாதநரகந்தன்னில் அழிந்திடுவார்மாந்தர்
குருவினது பத்தினிமேல் ஆசைகொண்டாலல்லோ
பொல்லாதநரகத்தில் கூடியழிந்திடுவார்
இப்படியாயுலகுதனி லழிந்திடுவார்கள்கோடி
இருமூடங்கொண்டவரே யிடந்துநடப்பீர்கள்
என்றுசொல்லிப்பூங்குறத்தி மிகநோக்கிநடந்து
இடைகுலுங்கநடைகுலுங்க நடைநடந்தாள்குறத்தி

வேறு

குறத்தியவள்போனபின்பு கொற்றப்போர்மன்னவர்கள்
வாடிமனந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
வார்த்தைகுளறியல்லோ மறுவேடமானார்கள்
முக்காடுபோட்டு மூடி மன்னர்பள்ளிகொண்டார்
பெண்டுபிள்ளைதான்மறந்து பூமியின்மேல் தான்படுத்தா
மாதுமயக்கம்பெரிதாச்சு மாநிலத்துமன்னவர்க்கு [ர்
குறத்திமயக்கம்பெரிதாச்சு கொடுமைபுரிமன்னவர்க்கு
கன்னிமயக்கமல்லோ தலையெடுக்கப்போகாது
அன்னமுந்தண்ணீ ருருந்தார்கள்மன்னவர்கள்
ஒருவருடன்பேசாம லுத்தமர்கள்வீற்றிருப்பார்
இப்படியாகவல்லோ விவரிருக்கும்வேளையிலே
மாலைக்குறத்தி மலைக்குறத்திபோய்நடந்தாள்
வாராளேபூங்குறத்தி மாதர்கள்வீதியிலே
பாடிவருகிருள் பத்தினியாள்வீதியிலே [யோ
கைபார்க்துக்கொள்ளலையோ பச்சைபோட்டுகுத்தலை
குறியொன்றுகேட்கலையோ கொம்பனைமார்பெண்டுகளா
கூடாதபெண்களுக்கு கூட்டிவைக்கமருந்துகொள்வீர்
சேராதபெண்களுக்கு சேரமருந்துமுண்டு
வாழாதபெண்களுக்கு வாழமருந்துண்டைகொள்வீர்
யுத்தம்விலக்கவென்றால் மெத்தமருந்துமுண்டு
சண்டைகெலிப்பதற்கு சாரக்குளிகையுண்டு
எதிரிமயங்கவல்லோ இசைவானமருந்துமுண்டு
நரைத்தநல்லகூந்தலது கறுக்கமருந்துமுண்டு
தளர்ந்தஸ்தனம் நிமிரத் தகுந்தமருந்துமுண்டு
என்றுமவள்பாடி இளங்குறத்திவாராளே
மாநகரமாளுகின்ற மகாராசன்தேவியரும்

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
நூற்றொருபெண்டுகளும் வேற்றுமைகளில்லாமல்
சொக்கட்டான்சூது சதுரங்கந்தானாடி
அம்மானைப்பந்து அழகுகழலாடி
ஆறுங்காய்தானாடி ஆலித்துக்கொண்டாடி
பந்தாடிச்செண்டாடிப் பல்லாங்குழியாடி
ஓலைக்கால்மண்டபத்தி லூஞ்சலுதைத்தாடி
பளிங்குமாமண்டபத்தில் பைங்கிளிமார்வீற்றிருந்தார்
கொப்பனைமார்களெல்லாங் கூடிவிளையாடினார்கள்
ஓரகத்திமார்களெல்லாம் ஒருமித்து அங்கிருந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
வீதியில்பாடியல்லோ வருங்குறத்திசேதிசொல்வோம்
பெருந்திருவாள்வீதிப் படிவாசல்காத்திருக்கும்
வாசற்படிகாக்கும் மயிலனையார்தாதியார்கள்
குறத்திவருமழகைப் பார்த்தந்தக்கொம்பனைமார்
ஒருத்திக்கொருத்தி யுறவாகியேது சொல்வார்
கண்டீரோவக்கமாரே கட்டுவச்சிபேரழகை
பார்த்தீரோதங்கைமாரே பூங்குறத்திதன்னழகை
சாய்ந்தநடையழகுஞ் சதுரானகைவீச்சும்
ஓய்ந்தநடையழகும் உருட்டிவிட்டபார்வைகளும்
கோத்தகழுத்தழகும் கொண்டையின்மேல்பூவழகும்
தகுந்தசவுளிகளும் தாள்பூட்டுசங்கிலியும்
முன்கைமுதாரிகளும் மோதிரம்பொன்னுருட்டுகளும்
தங்கப்பரக்கமுந் தகதகெனமின்னிவர
பார்பில்சரப்பளியுந் தோளில்புரண்டாட
அக்குமணிதாவடங்கள் ஆபரணஞ்சோதிமின்ன
பச்சைமணியழகும் பலகாரத்தாவடமும்
இந்தக்குறத்தியரின் இடையழகுகண்டீரோ
இந்நாட்டாளல்லியிவள் இத்திசையுமல்லவென்றார்
தென்னாட்டுகுழவல்லோ தீவிலிருந்தாளென்றார்
தெய்வக்குறத்தியிவள் தெளிவறிந்தகட்டுவச்சி
நினைத்தகுறியுரைப்பாள் நிலைமையுள்ளபூங்குறத்தி
ஆச்சியாரண்மனைக்கு அழைத்துமெள்ளவாரும்
கட்டழகிமாதரெல்லாங் கைகாட்டிகுறிகேட்பார்
என்றுசிலதாதியர்கள் எழுந்திருந்துள் நுழைந்து
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்முன்னே வந்து
செம்பொன் திரை நீக்கி சேரவந்துதெண்டனிட்டு
அம்பொன் திரை நீக்கி அழகாகத்தெண்டனிட்டு
தெண்டனிட்டுத்தாதியருஞ் சேரவெழுந்திருந்து
மோதிரமின்னவல்லோ மூடிமேலேகைதொழுதார்
பேடைமயிற்கண்ணாளும் பெருந்திருவாள்தான்பார்த்து
நீயார்பெண்ணே தாதி அறியவுரையுமென்றாள்
எவர்பெண்கள் தாதி எனக்கறியக்கூறுமென்றாள்
தாதியவள்கேட்டுத் தையலர்க்கேதுசொல்வாள்
ஆர்பணியுமல்லவள்காண் அடியேனுன்பணிதான்
பெரியோருடைய பெருமானே வுன்பணிதான்
மாநகரமாளுகிற மகாராஜாசொற்படிக்கே
உங்களதுவீதியடி காக்கிறதாதியென்றாள்
பேரால்மிகுந்ததொரு பெருந்திருவாள்தான்கேட்டு
நீயிங்கேவந்ததொரு காரணத்தைச்சொல்லுமென்றாள்
ஏதுக்காகவந்தாய்நீ யெனக்கறியக்கூறுமென்றாள்
தையலுரைக்கேட்டுத் தாதியருமேதுசொல்வாள்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னாச்சிநீர்கேளும் இன்னமொருவார்த்தை
காணாதவதிசயங்கள் கண்டுவந்தேன்வீதியிலே
பாராதவதிசயங்கள் பார்த்துவந்தேன்வீதியிலே
தேசத்தையாளுகின்ற திரியோதிராஜன்
அவர்க்குமொருவருண்டு எனக்குமொருவருண்டு
வாளைக்கையிலெடுத்து வாசலிலேநில்லுமென்றார்
வாள்கொடுத்தநாள்முதலாய் உன்வாசல்காத்திருந்தேன்
அன்றொருநாளின்றளவும் அணிவாசல்காத்திருந்தேன்
மண்டலத்துப்பெண்களெல்லாம் வாராதபேர்களில்லை
சீமையிலுள்ளபெண்கள் சேனபெண்கள்வந்திருப்பார்
பட்டமாசாளும் பத்தினியார்வந்திருப்பார்
அந்தரத்துப்பெண்கள் அநேகப்பேர்வந்திருப்பார்
மேலோகம்வாழ்கின்ற மெல்லியர்கள்வந்திருப்பார்
பிச்சைக்குவந்தவர்கள் பேர்சொல்லமாளாது
இரக்கவென்றுவந்தவர்கள் எத்தனையோகோடியுண்டு
குறிசொல்லவந்தவர்கள் கோடானகோடியுண்டு
இப்படிக்கொத்ததொரு குறத்தியரை நான்கண்டதில்லை
காணக்கிடையாது கன்னியிளங்கொடியாள்

பார்க்கக்கிடையாது பத்தினியாள்கட்டுவச்சி [ண்டை
இதுபுதுமைகண்டுமல்லோ சொல்லவந்தேனுந்தன
அழைக்கத்திருவுளமோ ஆச்சியென்றுதெண்டனிட்டா
பேடையயிற்கண்ணுள் பெருந்திருவாள்கேட்டு [ள்
ஓரகத்திமார்களே உற்றுமவள்பார்த்து
மாதுகுறத்தியரை வரவழைக்கவேண்டுமோதான்
சம்மதியுண்டானல் தங்கைமார்சொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அனைவரும்சம்மதித்து
தாதிமுகம்நோக்கித் தையலர்களேதுசொல்வார்
கன்னிகுறத்தியரைக் கடுகவழையுமென்றார்
மாதுகுறத்தியரை வரவழைத்துவாருமென்றார்
அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியர்கள்
எட்டடியுமோரடியாய விட்டுமிகநடந்து
பத்தடியுமோரடியாய்ப் பறிவழிநடந்து
ஓட்டம்பெருநடையாய் ஓடிவந்தார்வீதியிலே
கட்டுவச்சிமுன்னேவந்து கன்னியருமேதுசொல்வார்
குறத்தியெதிரில்வந்து கொம்பனைமாரேதுசொல்வார்
வாடிமலைக்குறத்தி மாளிகைவாசலுக்கு
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்தேவிகட்கும்
பார்த்துக்குறியுரைத்தால் பாங்கியர்கள்தந்திடுவார்
கண்டுகுறியுரைத்தால் கனகப்பணிதான்கொடுப்பார்
வருகிறையோகட்டுவச்சி மாளிகைக்கென்றழைத்தார்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தமலைக்குறத்தி
நல்லதென்றுசம்மதித்து நடந்தாளேகட்டுவச்சி
அடிச்சிலம்புபாடகமும் அசையவழிநடந்தாள்
தண்டைச்சிலம்பசைய தானடந்தாள்கட்டுவச்சி
ஆடையொதுக்கியவள் அசைந்துவழிநடந்தாள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்பரந்தாண்டி
மண்டபத்தின்வழியாக வந்திருந்தாள்பூங்குறத்தி
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்து
குறத்தியவள்வீற்றிருக்க குறிஞ்சமணைபோடுமென்றாள்
மலைக்குறத்திவீற்றிருக்க வட்டமணைபோடுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியர்கள்
ஏலக்கருங்குழல்மார் இட்டார்கள்பூந்தடுக்கு
கோலவன்னக்கட்டுவச்சி குந்துங்களென்றுரைத்தார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி

கால்மடித்துப்பூங்குறத்தி கைக்கூடை முன்னேவைத்து
ஒருகால்மடித்துமவள் ஒருகால்பிறணைத்து [வாள்
பிரப்பங்கோல்கைபிடித்து பெருந்திருவாட்கேதுசொல்

குறம்

நன்மையுண்டுஉன்மனைக்கு நான்வருவதாலே
நாடாளும்ராஜருக்குப் பத்தினியேகேளும்
தலைக்குயரக்கெவுளிநின்று சொன்னதினாலம்மே
தனக்குவரும்செல்வங்களில் சொல்லமுடியாது
மார்தனக்குநேராக டனைக்கெவுளிசொன்னால்
மலைராமரருளாலே சந்தோஷமுண்டாம்
பெண்டுகளானவர்க்கு இடதுபக்கந்துடித்தால்
பூமியரசாள்வதற்குப் பிள்ளைபெறுவார்கள்
மற்றுமுள்ளவலதுபக்கம் மங்கையர்க்குத்துடித்தால்
மாருமல்பேரிடிகள் விளைந்துமல்லோவருமே
ஆணாயப்பிறந்தவர்க்கு வலதுபக்கந்துடித்தால்
அன்றெட்டாம்நாளையிலே அரசுநிலையாள்வார்
கனத்தவொருஇடதுபக்கம் காளையர்க்குத்துடித்தால்
காசினியில்வாழாமல் கைலாசஞ்சேர்வார்
இப்படியாயுலகதனில் சொல்லுகிறார்பெரியோர்
எனையழைத்தகாரியங்கள் உரையுமென்றாள்குறத்தி

வேறு

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்திமுகம்நோக்கிக் கொம்பனையாளேதுசொல்வாள்
எந்தநாடுங்களுக்கு இருப்பிடத்தைச்சொல்லுமென்றாள்
வாய்திறந்துகட்டுவச்சி மயிலணையாளேதுசொல்வாள்

குறம்

எந்தனதுநாடுதனைக் கேட்கவந்தாயம்மே [ம்
இருப்பிடத்தைச்சொல்லுகிறேன் விருப்பமுடன்கேளு
ஆதியென்றகைலாச நாதரருளாலே
ஐங்கரனார்தன்னருளா லம்மையருளாலே
இந்தநாடெங்களது தென்னாடுஅம்மே
இந்திரருஞ்சூரியரும் இருக்குமெங்கள்நாடு
சூரியருஞ்சந்திரரும் சூழ்ந்திருக்கும்நாடு
சுத்தமுள்ளபெரியோர்கள் தவம்புரியும்நாடு
அந்தணர்கள்வேதியரும் அழகானமுனிவர்

மந்திரங்கள்சாஸ்திரங்கள் மறையோதும்நாடு
மறவாமல்உமையாளும் துதிக்குமெங்கள்நாடு
ஆறுமுகனாரெங்களுக்குக் குருபீடமம்மே
காளியம்மையாடுவதும் எங்களதுநாடு
ஆயரவரெந்தனது உடன்பிறந்ததமையன்
அவருடையதுவாரகைதான் எந்தனதுநாடு
இந்திரனாரெந்தனுக்கு இசைந்தவம்மானம்மே
அப்போதுதெய்வபதி நாங்களரசாள்வோம்
மேகவர்னனெந்தனுக்கு சிறுதகப்பனம்மே
மெய்யான அவர்பதியை நாங்களரசாள்வோம்
நாகராசனென்தகப்பன் நாயகயேகேளும்
நாகலோகமெல்லாம் அரசாள்வோம்நாங்கள்
அந்தணனாராளுகின்ற பூமியெல்லாமுழுதும்
அடங்கலுநாமரசாள்வோம் ஒருவரெதிருண்டோ
தென்மதுரைச்சொக்கலிங்கம் என்தகப்பனம்மே
தேவாதுமணிபுரத்தை நாங்களரசாள்வோம்
ஈரேழுபதினாலு லோகமெல்லாம்நாங்கள்
எப்போதுமரசாள்வோமிணையொருவரில்லை
தப்பாமலெங்களது சீமைதனிலம்மே
தளராதுஒருநாளும் பஞ்சங்களுமில்லை
அக்ஷயத்தாலாயிரம்பேர்க் கன்னங்களுமிடுவோம்
ஆதிகயிலாசசிவ சங்கரனாருளால்
மந்திரத்தினால்மாங்காய் பறிப்போமடிநாங்கள்
மாமுனிவர்தன்னருளால் மாயவனார்செயலால்
தந்திரத்தினால்மாங்காய் இற்றுவ்பூச்செய்வோம்
தென்னிலங்கைரகுராமர் தன்னருளாலம்மே
பச்சைமலைக்கிழிருந்து பழங்கள்மிகப்பறிப்போம்
பசிகாலமானாலே பட்டணத்தில்திரிவோம்
கொச்சிமலைகுடியிருந்து கோவைப்பழம்பறிப்போம்
குளிர்க்காலமானாலே குறியுரைக்கவருவோம்
அக்குமணிகொக்குமணி கொள்வையடியம்மே
ஆண்மைவரப்புருடனுக்கு மருந்துகொள்வீரோ
பச்சைமணிபாலமணி யிச்சையுண்டாவுமக்கு
படைமுற்றுஞ்சண்டைவெல்ல வசியமுண்டுகொள்வீர்
இந்நாட்டுக்குறத்தியைப்போ லிச்சைசொல்லமாட்டேன்
எந்நாளுமுமையவட்குங் கைபார்க்குங்குறத்தி

உண்மையுள்ளகுறியுரைக்க உச்சிதங்கள்பெற்று
வண்மையுள்ளஎந்தனது மனையிடத்திற்சேர்வேன்
ஏழுநாளாச்சுதடி தென்மதுரைவந்து
இளங்கொடியாளல்லியர்க்கு இசைந்துகுறிசொன்னே
ஐந்தொருநாளாச்சுதம்மா துவாரகைக்குவந்து [ன்
அலமேலுமங்கையர்க்கு ஆனகுறிசொன்னேன்
பத்தொருநாளாச்சுதடி அத்திபுரம்வந்து
பாவையரேயுந்தனுக்குக் கைபார்ப்பேன் நீவா
கைக்குழந்தைபசியாலே கதறுதடியம்மா
கடுகெனவேமனைபுகுந்து அன்னமளித்திடுவாய்
அரிசியும்வெற்றிலையும் அள்ளியிடுவாயே
அதற்கேற்றபிரமனது பத்திரியுந்தாராய்

வேறு

அந்தவுரைகேட்டு அந்தப்பெருந்திருவாள்
தாமக்கருங்குழலாள் தாதியரைத்தானழைத்தாள்
இன்றுமுறைஎந்தனதுஎழுந்திருந்துமுன்னேவந்தாள்
அழைத்தபணிசொல்லுமென்று யருங்கிளிதெண்டனிட்
டாள், என்னபணிசொல்லுமென் றிளங்கொடியேது
சொல்வாள்,பேடைமயிற்கண்ணுள்பெருந்திருவாளேது
சொல்வாள், ஆனகுறத்தியர்க்கு அன்னம்படையுமென்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள் [ருள்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயுங்கொப்பளித்து
ஆக்குமடப்பளியை அலகிட்டுத்தாள்திறந்து
கோட்டைமடப்பளியை குச்சிட்டுத்தான் திறந்து
முற்றத்திலேபோட்டு முத்துப்போல்சாதமிட்டு
சுற்றிக்கறியனைவைத்துப் புத்துருக்குநெய்வார்த்தாள்
குத்துப்பருப்புமிட்டுக் கூசாமல்நெய்வார்த்தாள்
கட்டுவச்சிமுன்னேவந்து கருங்குழலாள்சொல்லுகிருள்
மாலைக்குறத்தியரே மலைக்குறத்திவாருமென்று
கட்டுவச்சிநாயகிக்கு கைக்குசலந்தான்கொடுத்து
உன்பாலனுக்கன்னம் படையுமென்ன தாதியரும்
அப்போதுகட்டுவச்சி ஆணழகியேதுசொல்வாள்
அன்னமதுவாங்கி ஆணங்குகட்டுவச்சி
மைந்தனுக்கன்னமிட்டு வளநாடுவந்திருக்க
குழந்தைக்கன்னமிட்டுக் கிளிமொழிவந்திருக்க
கூடையொருபக்கம்வைத்து குந்திஞள்பூங்குறத்தி

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாளே துசொல்வாள்
குறத்திமுகம்நோக்கி கூறுவாளிராசகன்னி
நீயிருக்கிறநாடு எழிலான தேசமும்
மயிலனையேயுன்னுடைய மைந்தர்பெருமாளும்
மைந்தர்பெருமையு மற்றப்பேர்சந்தடியும்
ஒன்றுமொளியாமல் உத்தமியேகூறுமென்றாள்
அப்போதுகட்டுவச்சி ஆரணங்கேதுசொல்வாள்

குறம்

தென்னாடுமலைநாடு யிருக்குமந்தநாடு
தேசமடி.கைலையங்கிரி யிருக்குமெங்கள்நாடு
கல்லடைந்தமலைநாடு காடுமந்தநாடு
கைலையங்கிரிநாதாங்கே காட்சிதரும்நாடு
சொல்லறியமலைநாடு சுகம்பெருகும்நாடு
சோணாசலவீசரது தேசமடி நாங்கள்
எத்திசையும்புகழ்படைத்து இருக்குமந்தநாடு
எழிலானமலைநாட்டுக் குறத்தியடி நாங்கள்
குறத்திமெத்தக்குனிந்தநாடும் குஞ்சரவநாட்டில்
கூசாமல்வாழுமந்த தேசமடி நாங்கள்
வறுத்தமுத்துச்செந்நெல்களும் முளைக்குமந்தநாடு
வாழருணகிரிநாடு தேசமடி நாங்கள்
முத்துமலைரத்தினமலை எங்களதுநாடு
மூவர்தமிழ்பாடுமலை எங்களதுநாடு
நீலமலைநிமலமலை எங்களதுநாடு
நித்தப் நித்தப் குறப்பாடி திரிவமடி நாங்கள்
பச்சைமலைபவளமலை எங்களதுநாடு
பரமசிவன்காளியுடன் வாதாடும்நாடு
கொச்சிமலைகுடகுமலை எங்களதுநாடு
குமரேசர்வள்ளியரைக் கைபிடித்தநாடு
குறத்திநல்லகுறச்சிறுக்கி கனதனவொய்யாரி
குமரேசர்வசந்தராய்க குறியுரைக்குங்குறத்தி
வெள்ளெருக்கம்பூச்சூட்டி முடிந்தவண்ணமலையில்
வேணவரங்கொடுப்பதற்கு குறியுரைக்குங்குறத்தி
உருகியபொன்கொடுத்தாலும் ஒன்றுமில்லையென்போம்
உண்ணாமுலையம்மனுக்கு உகந்தமுதுபடைப்போம்
வெள்ளிமலைரத்தினமலை எங்களதுநாடு
விக்கினர்க்கும்வேலவர்க்கும் குறியுரைக்குங்குறத்தி

கண்டத்திலேகறுப்புடைய கைலையங்கிரிநாதர்
கர்த்தருடையதயவாலே குறியுரைக்கவந்தேன்

வேறு

தேனூர்விராடமம்மா தினமுஞ்செந்நெல்விளையும்
கல்லின்மேல்நெல்விளையும் கதிர்வாங்கிமேலோங்கும்
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
வாழைவடக்கினும் வான்கமுகுநெற்கினும்
சோலைவடக்கினுந் துய்யபலாமேற்கினும்
கோவும்புலியுமொரு குளத்திலேநீர்குடிக்கும்
கீரியும்சர்ப்பமுமொரு கிண்ணியிலேபால்குடிக்கும்
எலியும்பூனையுமொரு பஞ்சரத்தில்வாழ்ந்திருக்கும்
தங்கமழைசொரிந்து தழைத்திருக்குமெங்கள்நாடு
மாதமும்மாரி மழைகள்பொழிந்துவரும்
திங்கள்மும்மாரிபெய்யுந் தேசஞ்செழித்திருக்கும்
என்றுமவளுரைத்து இருந்தாளொருபுறமாய்

பெருந்திருவாள் சொல்வது

வேறு

அப்போபெருந்திருவா ளருங்கிளியாளேதுசொல்வாள்
குறத்திமுகம்நோக்கிக் கொம்பனையுங்கூறலுற்றாள்
உந்தனதுசீமையெல்லா முரைத்தாயேகட்டுவச்சி
நீ-எந்தவூர்எந்ததேசம் எனக்கறியக்கூறுமென்றாள்
அப்போமலைக்குறத்தி ஆரணங்குசொல்லலுற்றாள்
உந்தனதுநற்குலமும் வுன்பேருஞ்சொல்லுமென்றார்

குறம் - வேறு

எங்கள்குலம்ராசகுலம் குறக்கூட்டந்தானுமல்ல
எழிலானகுடிசையிலே குடியிருப்போமம்மா
ஐவருக்குப்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
அபிமானங்குலையாத ஜாதியடிநாங்கள்
பஞ்சவர்க்குப்பெண்டிருப்போம் நாங்களடியம்மே
பசிதாபங்குலையாத ஜாதியடிநாங்கள்
பெண்டிருந்ததேசமெல்லாம் பிள்ளையொன்றுமறியோம்
பெருநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடிநாங்கள்
மாலையிட்டநாள்முதலாய் மனதறிந்தாரில்லை
மடிநெருப்பைத்தீண்டொணாத ஜாதியடிநாங்கள்
கூறையிட்டநாள்முதலாய்க் குணமறிந்ததில்லை

கொடிநெருப்பைத்தீண்டொணுத ஜாதியடி நாங்கள்

வேறு

பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள் நாயகியும்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளே துசொல்வாள்
வாடிமலேக்குறத்தி வர்ணமலேக்கட்டுவச்சி
மாலேயிட்ட நாள்முதலாய் மனதறிந்ததில்லேயென்ருய்
கூறையிட்ட நாள்முதலாய் குணமறிந்ததில்லேயென்ருய்
கையிற்குழந்தையது வந்தவயணமென்ன
மடியிற்குழந்தையது வந்தவாறுசொல்லுமென்ருள்
அப்போமலேக்குறத்தி அருங்கிளியாளே துசொல்வாள்

குறம்

ஆயனருளாளன் அண்ணனடியம்மே
அரிவையந் நசீதையரும் நாத்தியடியம்மே
உலகளந்தமாலெங்கள் அண்ணனடியம்மே
உத்தமியாள்சீதையெங்கள் நாத்தியடியம்மே
உலகாளும்மாசகன்னி யெனக்குச்சக்காளத்தி
அவளேப்பெற்றசொக்கரெங்கள் தகப்பனடியம்மே
மாயவனேமைந்தன்வரம் வேண்டுமென்றுகேட்டால்
மகிழ்ந்துமெங்கள்ராமரல்லோ மைந்தன்வரம்தருவார்
மாயவரைமனந்தனிலே தினம்நினேப்போம்நாங்கள்
மாயவரேகுழந்தையாக மடிமீதிலிருப்பார்
பிள்ளேயில்லாதெங்களுக்குப் பிள்ளேவரம்தருவார்
மைந்தன் கலிதீர்க்கவந்த மாயனிவர்தாண்டி
மந்திரத்தாலேந்துபிள்ளே யுண்டோடியெனக்கு
மகாதேவர்தந்தபிள்ளே யிரண்டடியம்மே

வேறு

குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளே துசொல்வாள்
இந்த-மாதுவுரைகேட்டு மயிலனையாளே துசொல்வாள்
மைந்தன்பெறும்வகை மயிலனையேசொல்லிவிட்டாய்
குழந்தைபெறும்வகை கொம்பனேயேசொல்லிவிட்டாய்
எந்தெந்தலோகமெல்லாங் கண்டுவந்தாய்கட்டுவச்சி
பார்த்துவந்தலோகமெல்லாம் பகரடிபூங்குறத்தி
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி [தேன்கேள்
பார்த்துவந்தலோகமெல்லாம் பைங்கொடியேசொல்லு

குறம் - வேறு

பூலோகபுவர்லோகம் பார்த்துவந்தேனம்மே

மேலானதெய்வலோகம் பார்த்துவந்தேனம்மே
மேன்மையுள்ளவைகுந்தம் கண்டுவந்தேனம்மே
சிரானசந்திரலோகம் பார்த்துவந்தேனம்மே
செகம்புகழுஞ்சூர்யலோகம் பார்த்துவந்தேனம்மே
மாலோகஞ்செனலோகம் பார்த்துவந்தேனம்மே
வரிசையுள்ளபிரமலோகங் கண்டுவந்தேனம்மே
நேரானதலாதலங்கள் பார்த்துவந்தேனம்மே
நிச்சயமாய்க்குறிசொல்லும் குறத்தியடி நானும்

வேறு

பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் தான்கேட்டு குறத்திமுகம்நோக்கி கொப்பனையாளே துசொல்வாள் பதினாறுலோகமெல்லாம் பார்த்துவந்தேனென்றுசொன்னாய், அந்தந்தலோகமெல்லா மறிந்துவந்தேனென்றுசொன்னாய், கண்டுவந்தலோகத்தில் கனத்தகுறிசொன்னதுவும், நீசொன்னகுறிக்குமெச்சி உச்சிதங்கள் தந்ததுவும், வாங்கிவந்தபூஷணங்கள் மயிலனையேசொல்லுமென்றாள், அப்போதுகட்டுவச்சி அழகாகவது சொல்வாள்

குறம் - வேறு

ஈசுரனார்பெற்றெடுத்த விக்கினராமவர்க்கு
வயிறுகிழிந்துமுகம்வேறு ஆகுதென்றுசொன்னேன்
இந்திரர்க்குவ்வானவர்க்கும் மயிலவர்க்குமல்லோ
இசைவாகநானுரைத்த குறிகள்மெத்தவுண்டு
ஈசுரர்க்குப்பிரமகத்தி யிருக்குதென்றுசொன்னேன்
இன்னமொருபெண்டுகைக்கு வருவாளென்றுசொன் [னேன்
என்குறிக்குமீசுரனார் மெச்சியல்லோ அப்மே
இயலானமுத்துமாலை யீய்ந்தாரடியம்மே
விக்கினரும்வேலவரும் எந்தனுக்குஅம்மே
வைடூரியக்குறக்கூடை தந்தாரடியம்மே
இந்திரரும்வானவரும் மெச்சியல்லோஅம்மே
கல்லிழைத்தகணையாழி தந்தாரடியம்மே
விஷ்ணுவுக்குமிலட்சுமிக்கும் வேணகுறிசொன்னேன்
விதமாகஎன்னையவர் மெச்சிக்கொண்டுஅழைத்து
பட்சமுடனெந்தனுக்கு இலட்சுமியாள் தானும்
பாங்கானமார்பதக்கம் தந்தாரடியம்மே

வேறு

அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளே துசொல்வாள்
குறம்பாடிபெற்றுவந்தாய் கோடானரத்தினங்கள்
உள்ளகுறியுரைத்து உச்சிதங்கள்பெற்றுவந்தாய்
பூங்குறத்தியெந்தனுக்குப் புகழ்ந்தகுறிசொன்னயானல்
உள்ளகுறியுரைத்தால் ரத்தினங்கள் தாரேனடி
நல்லகுறியுரைத்தால் ரத்தினங்கள் தாரேனடி
கொம்பனையேயெந்தனுக்குக் குறியுரைத்தபிற்பாடு
குறக்கூடை தானிறையக் கொட்டுகிறேன் ரத்தினங்கள்
ஒன்பதுரத்தினங்கள் உத்தமியேதந்திடுவேன்
வச்சிரவைடூரிய மாணிக்கந்தந்திடுவேன்
நீலப்பதக்கங்களும் நிறைந்தமுத்துத்தாவடமும்
பச்சைப்பதக்கங்களும் பருத்தமுத்துத்தாவடமும்
தாளிப்பதக்கங்களும் சன்னல்பின்னல்தாவடமும்
அத்தனையும்நான் தருவேன் ஆனகுறிசொல்லுமென்று
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி [ள்
மாதுமுகம்நோக்கி மலைக்குறத்தி துசொல்வாள் [டேன்
தாளிபதக்கம்வேண்டேன் சன்னல்பின்னல்நான்வேண்
பச்சைப்பதக்கம்வேண்டேன்பருத்தமுத்துநான்வேண்
டேன், மாணிக்கம்வேண்டேன் மரகதண்டிநான்வேண்
உத்தமியேயுன்தயவால் மெத்தவுண்டுளந்தனுக்கு[டேன்
பேர்பெற்றளங்கள் பெருமாள்தயவாலே
வெள்ளிமலைமேலே வேணதுண்டுஎங்களுக்கு
உன்கையில்தானிருக்கும் கற்பூரசம்பாவும்
செந்நெல்கொடுத்தாயானல் சீராகஎந்தனுக்கு
அள்ளிக்கொடுத்தாயானல் ஆனந்தவாழ்மார்பி
செந்நெலதுகொடுத்தால் நல்லகுறியுரைப்பேன்
குறக்கூடைநெல்கொடுத்தால்குறியுரைப்பேனுந்தனுக்கு
மெல்லியவள்சொற்கேட்டு நல்லதென்றுசம்மதித்தாள்
அழகுசம்பாநான் தருவேனனகுறிசொல்லுமென்றாள்
நெல்வளர்த்துநான்தருவேன் நல்லகுறிசொல்லுமென்
அப்போதுகட்டுவச்சி அதற்குமேசம்மதித்து [றாள்
கொம்பனையாள்மாதருக்குக் குறிசொல்லபோனுள்காண்

குறம்

சாணியதுதானெடுத்துச் சதுருடனேமெழுகி

சட்டமுடன்பிள்ளையாரைப் பிடித்துமங்கேவைத்தார்
அறுகுதும்பைகொன்றையது அவர்சிரசில்சாற்றி
அழகானகனிவகைகள் கொண்டுவந்துவைத்து
கிழங்குடன்வாழைப்பழம் தேங்காயுமுடைத்து
கிண்ணியிலேபாலமுர்தங் கொண்டுவந்துபடைத்தார்
பச்சரிசிதேங்காயும் பயறுடனேபாலும்
இச்சையுடன்தான்படைத்து தீபதூபங்கொடுத்தார்
அறுகுதும்பைகையிலெடுத்து அவர்சிரசில்சாற்றி
சுற்றிவந்துகைதொழுது தெண்டனிடுமென்றாள்
சிந்தையிலேயுன்குறைகள் நீநினைத்து அம்மே
இந்தநல்லகணபதியை வந்துபணியென்றாள்
உங்கள்குலதெய்வங்களை யுகந்துநன்றாய்ப்போற்றும்
உன்வீட்டுப்பூவாடைக் காரிகளை நினைத்து
சிந்தையிலேதியானம்பண்ணி வந்தமருமம்மே
திறமாகவுந்தனுக்குக் குறியுரைப்பேனிப்போ
எந்தன்குலதெய்வங்களை நானினைத்து அம்மே
இகழாமலுந்தனுக்குக் குறியுரைப்பேனிப்போ
கெங்காபவானியம்மாள் காளிகாதேவி
அங்காள அம்மன் சத்தி அனைவோரும்வாருங்கள்
ஆகாசவாணி துர்க்கை ஐயனார்பிடாரி
அலைகடலில்வாழுகின்ற கன்னிகளும்வாருங்கள்
கைலாசவாசருமே கைலைமலைநாதர்
காஞ்சியில்வாழ்ஏகாம்பர காமாட்சிவாங்கள்
அண்ணாமலைநாதருமே யுண்ணாமுலைத்தாயே
கொல்லாபுரியாளும்வந்து குறக்கூடையிலமரும்
ஏழுகன்னிகளும் எல்லைப்பிடாரிகளும்
எல்லவருவந்துமிந்தக் கூடைதனிலமரும்
ஈசரும்பார்வதியும் இருவருமாய்நீங்கள்
இன்பமுள்ளகுறக்கூடை வந்தமரவேணும்
அச்சுதரும்இலட்சுமியும் ஆனந்தமாகப்
பட்சமுள்ளகுறக்கூடை தன்னில்வந்தமரும்
பிரம்மாவுஞ்சரஸ்வதியும் புகழாகநீங்கள்
பெருமையுடன்குறக்கூடை வந்தமரவேணும்
தேவேந்திரனிந்திராணி சித்தர்கின்னரர்களும்
தெளிவானகுறக்கூடை தன்னில்வந்துஅமரும்
எங்கள்வள்ளிதெய்வானை யம்மையிருவர்களுமொன்றாய்

வேலவரும்வந்துகுறக் கூடைதனிலமரும்
ஏழுமுனியிளையமுனி பன்னூராசாமி
இவர்களெல்லாமொன்ருகக் குறக்கூடைதனிலமரும்
பச்சமலைத்தாயாரும் பெரியபாளையத்தாளும்
பாவாடைராயனுமே வந்துமிகவமரும்
முப்பத்து முக்கோடி தேவர்களுங்கூட
அனைவோருவந்துமிந்தக் கூடைத்தனிலமரும்
அண்டரண்டதெய்வங்களை நினைத்துமந்தக்குறத்தி
அழகுபெருந்திருவாட்கு ஏதுகுறிசொல்வாள்
முந்திமுந்திவிநாயகனைத் தொழுவமடி நாங்கள்
முருகராதுபாதமலர் எந்நாளுமறவோம்
சத்திவிநாயகனைத் தொழுவமடி நாங்கள்
சரஸ்வதியை அநுதினமும் சிந்தையினில்மறவோம்
ஆதிசிவன்மாயவரைப் பிரம்மாவைத்தொழுவோம்
ஆகாசதேவருடன் இந்திரரைமறவோம்

வேறு

அப்போமலைக்குறத்தி ஆரணங்கேதுசொல்வாள்
தேவாதிதேவர்களை நினைந்துமே அப்பொழுது
கொல்லாபுரத்தாளை நினைந்துகுறிசொல்லுகிறேன்
குறிசொல்வேன்வாடியம்மா யென்ருளேபூங்குறத்தி
அப்போதுபெருந்திருவாள் ஆரணங்கேதுசொல்வாள்
அப்படிக்கேநல்லதென்று ஆரணங்குவந்தயர்ந்தாள்
குறக்கூடைமுன்பாகக் குந்தினாள் நாயகமும்
மலைக்குறத்திகட்டுவச்சி வகையாகவேதுசொல்வாள்

குறம்

முறம்நிரம்பச்செந்நெல்கொண்டு மூன்ருகப்பகுத்து
உன்மனதில்கேட்டதெல்லாம் சொல்லுகிறேன்கேளும்
உன்பேருபெருந்திருவாள் உடன்பிறந்தாள்சுபத்திரை
உன்கணவன்திரியோதிரன் உள்ளபடிதாண்டி
இலக்குணர்க்குப்பூநூல் கலியாணமென்றுசொல்லி
ஐவரையும்அழைத்துவந்த துண்டோடி நீங்கள்
அவர்கள்வரும் வழிதன்லே வசிகளை நாட்டி
ஐவரையும்கொல்லவென்று எண்ணியிருந்தீர்கள்
ஆதியென்றகோபால கிருஷ்ணராதுதவால்
அதுக்குந்தப்பிப்பிழைத்தார்களவர்களுமம்மே
மல்லர்களைவிட்டுமல்லோ எண்ணைகளைத்தேய்த்து

மாளாதபஞ்சவரைக் கொல்லவென்று நினைத்தீர்
ஏழுலகமாண்டதொரு எம்பெருமான் தயவால்
எம்பெருமானருளாலே ஐவர்களும்பிழைத்தார்
குளிக்குமந்தக்குளந்தன்னில் கூர்வசியை நாட்டி
கூசாமல்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அன்றுமந்தப்போதினிலே நஞ்சுமதைக்கலந்து
உயிருள்ளபாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்
அப்போது வீமராசன் அவர்களுண்ணும்சோற்றை
அனைவருக்கும் ஆகாதென்று தான் வாரிப்புசித்தார்
வாரியுண்டசோற்றாலே மதிமயக்கமாகி
மன்னவர்மெய்மறந்து வைகுந்தஞ்சேர்ந்தார்
அப்போது நால்வருமே அலண்டுபுரண்டழுது
ஆயனந்தமாயவரை மிகநோக்கித்தொழுதார்
அப்போதுமாயவரும் ஐவர்களைக்காக்க
அத்திபுரமமர்ந்தாரடி ஜோதிவடிவாக
விஷக்கடிபாம்புக்கடி தீருதற்குமருந்து
வேணவிதமருந்தெடுத்துக் கூறிவந்தார்தெருவில்
கூறிசம்பவித்தசத்தத்தைத் தருமராமறிந்து
கொப்பெனவேதம்பிதனை யழையுமென்றுசொன்னார்
அப்போதுதம்பியவன் தானழைத்துவந்தான்
எனழைத்தீரென்று சொல்லி ஜோகியவன்கேட்க
தம்பிதனைஎழுப்புமென்று தர்மர்சொன்னாப்போ
எழுப்பிவிட்டாலெந்தனுக்குக் கொடுப்பதென்னவென்
எந்தனது ஆஸ்திகளை உந்தனுக்குத்தருவேன் [றார்
அப்போதுஜோகியவன் மருந்தெடுத்துஉரைத்து
ஆயரது அருளாலே பிழைக்கவென்றுகொடுத்தான்
வைதந்தம்போனவுயிர் வந்துவீமர்தழைக்க
மந்திரங்கள்தந்திரங்கள் செய்தாண்டியம்மே
அவன்செய்தமந்திரத்தால்பிழைத்தாண்டிபீமன் [பீமன்
அலண்டு நித்திரைபோனவன்போல்புரண்டெழுந்தான்
செத்திருந்தபீமனுமே பிழைத்தெழுந்தான்பீமன்
திகிலெடுத்துமனங்கலங்கி திரியோதிரனழுதான்
மற்றுமொருவிதத்தாலே பஞ்சவரைக்கொல்ல
மனமகிழ்ந்துசகுனியுடன் ஆலோசனைசெய்து
படுக்கின்றபாய்தனிலே பாம்புகளைவிட்டு
பதைபதைக்கப்பாண்டவரைக் கொல்லத்துணிந்தீர்கள்

அதற்குந்தப்பிபிழைத்தார்கள் பாண்டவர்களம்மே
ஆயனார்மாயனது உபாயமடியம்மே
வஞ்சனையாய்ச்சூதாடிப் பாண்டவரையப்போ
மாளாதவிலங்குகளை மாட்டவைத்தாரம்மே
பஞ்சவரைவஞ்சனைகள் செய்ததுபோதாமல்
பாஞ்சாலிதுரோபதையைப் பற்றியிழுத்தார்கள்
ஐவருக்கும்உகந்ததொரு அபிஷேகப்பத்தினி
ஆரணங்குதுரோபதையை சபைதனிலேயிழுத்தார்
பற்றியிவர்தானிழுத்துப் பாவைதுகிலுரிந்து
பண்ணுதபங்கமெல்லாம் பண்ணிவைத்தார்சபையில்
கட்டழகிதுரோபதையாள் மனங்கலங்கியப்போ
கர்த்தரவர்மாயவரைக் கைதொழுதுநின்றாள்
ஆயரவர்மாயவனார் அறிந்தாரிவள் துயரம்
அச்சமயம் துகில்மாளா ஆயர்வரமளித்தார்
பத்தினியாள் துரோபதைக்கு மாளாத்துகில்கள்
வளருதென்றுசபைதனிலே மெச்சிநின்றார்பெரியோர்
இப்படியாய்வஞ்சனைகள் செய்ததுண்டோ அம்மே
இன்னங்கொஞ்சமுண்டடிதான் சொல்லுகிறேன்கேளு
அவருடையபங்குகளை யடங்கலுமேபறித்து
அரண்மனைமண்டபமு மிடிக்கனுாயமுண்டோ
அவருடையதேவிதன்னை அம்பலத்தில்நிறுத்தி
அவளைமிகவாய்ப்பழுது சொன்னாரடியம்மே
உத்தமியைக்கொண்டுவந்து உங்கள்சபைநிறுத்தி
உரியாததுகிலுரிந்த துண்டடிதான் நீங்கள்
பத்தினியைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
பாங்கழியப்பேசின வுன்புருஷனல்லோ
மாதுதனைக்கொண்டுவந்து மகாசபையில்நிறுத்தி
மானமழியப்பேசினது முண்டடிதான் நீங்கள்
அப்பொழுதுதுரோபதையாள் தன்மனதிலெண்ணி
அண்டாதசண்டாள ரென்றுமிகநொந்து
திரியோதிரன்முகம்பார்த்து தேவியவள்சொல்வாள்
தீராதபெருஞ்சாபம் இட்டாளந்தச்சபையில்
மொய்குழலாள் துரோபதையும் மூன்றிரண்டுபேரும்
முடிமன்னர்சபைதனிலே யிட்டார்பெருஞ்சபதம்
இட்டபெருஞ்சபதத்தினால் திரியோதிரன்நொந்து
தன்மனதில்தானடுங்கித் தகைமையெடுத்துரைப்பான்

பன்னிரண்டுவருஷமட்டும் வனவாசந்திரிந்து
பதின்மூன்ரும்வருஷமதில் மறைவாகவிருந்து
பதிமூன்றுஞ்சென்றவுடன் பதிஞலில்வந்து
பாரதத்தைதான்முடித்துப் பட்டமாளுமென்ருன்
இத்தனைவஞ்சனைகள் செய்ததுண்டு நீங்கள்
அத்தனையும்பொறுத்துஐவர் போஞர்வனவாசம்

வேறு

நீங்களிந்தஞாயமெல்லாம் செய்ததுண்டோவென்று
அந்தவுரைகேட்டு அழகுபெருந்திருவாள் [ரைத்தாள்
குறத்தியுரைகேட்டுக் கொம்பனையாளேதுசொல்வாள்
வஞ்சனைகள்செய்ததுண்டு மாயங்கள்மெத்தவுண்டு
பண்ணுதகோலமெல்லாம் பண்ணிவைத்தாளேவரையும்
வஞ்சனைகள்செய்ததுண்டு வனவாசம்போனதுண்டு
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
பதிமூன்றுஞ்சென்றபின்பு பதிஞலில்பஞ்சவர்கள்
பாரதயென்று படையெடுத்துவருவாரோ
காடாண்டபஞ்சவர்கள் நாடாளவருவார்களோ
வருவாரோவாராரோ மற்ருென்றுஞ்சொல்லடிநீ
என்புருஷன்தானே யிவர்நாட்டையாள்வாரோ
பாரதமென்று படைபோகும்வேளையிலே
நாங்கள்கெலிப்பதுவும் நாடுநகராளுவதும்
அவர்கள்கெலிப்பதுவும் ஆராய்ந்துசொல்லுமென்ருள்
அப்போதுமலைக்குறத்தி அரிவையருமேதுசொல்வாள்
நத்திவந்ததெய்வமோதான் வுற்றகுறியுரைக்க
பஞ்சவர்கள்தன்மனதைப் பார்த்துமிருந்தேனே
கட்டழகர்தன்மனதைக் கண்டுமிருந்தேனே
சாதகம்பொய்யாது தலைவிதியும்தப்பாது
பிர்மனெழுத்துதான் பிரளாதுஒருநாளும்
கர்த்தரிடகட்டளைகள் கடவாதொருநாளும்
கொல்லாபுரத்தாளே எண்ணியேயிப்பொழுது
சூதுநடத்தையெல்லாஞ் சொல்லுகிறேன்கேளடி

குறம்

கூடைதனிலமர்ந்திருக்கும் கொல்லாபுரத்தாளே
கொம்பனையாள்கேட்குங்குறி சொல்லவரமருளும்
இன்னமிவள்கேட்குங்குறி யெல்லாம்நான்சொல்ல
எந்தனுக்குவாக்கருளும் என்றுமிகத்தொழுது

பெருந்திருவாள்முகம்நோக்கிப் போனதொருகுறத்தி
பெருமையுள்ள ஐவரது சேனைகளைச்சொல்வாள்
தர்மமேஜெயமென்று போனார்வனவாசம்
தர்மங்கள் நினைப்பவர்க்குத் தாட்டியுண்டோசொல்லும்
ஐவர்களும் ஐந்துருவங் கொண்டுமல்லோவம்மே
அன்பானவிராடபுரஞ் சேர்ந்தாரடியம்மே
இன்னமுந்தன் கணவன்படை சேனைகளைக்கூட்டி
இயலானயுத்தங்கள் நடக்குமடியம்மே
உயுத்தங்கள் நடக்கையிலே ரத்தக்கடலோடும்
மெத்தெனவே நானுரைத்தேன் சற்றேநின்றுவாரும்

வேறு

அப்போபெருந்திருவாள் அரிவையருமேதுசொல்வா[ள்
ஆனமலைக்குறத்தி அழகானகட்டுவச்சி
வர்னமலைக்கட்டுவச்சி வாக்குரைப்பாயெந்தனுக்கு
என்கணவன்ராச்சியத்தை யாண்டுமிருப்பானோ
அத்திபுரபட்டணத்தை யாள்வாரோஎன்புருஷன்
ஒத்தாசாள்வாரோ வுததமிதோஎன்புருஷன்
பங்காளிபஞ்சவர்கள் பாதிநாடாள்வாரோ
இன்னம்வருவாரோ எங்கள்தாயாதிகளும்
சாகாமலேபிழைத்துத் தரணிபதியாள்வாரோ
செத்துமடியாமல் ஜெகதலத்தையாள்வாரோ
சண்டைபண்ணிநாடுநகரந் தாமேகெலிப்பாரோ
மறுபடியும்வருவாரோ மன்னரந்தப்பஞ்சவர்கள்
எனக்குத்தெரியச்சொல்லு மேந்திழையேகட்டுவச்சி
அப்போமலைக்குறத்தி அழகாகவதுசொல்வாள்

குறம்

பார்சபைகளில்விரிந்த கூந்தலடியம்மே
படுகளத்தில்முடிப்பேனென்று போனாள் வனவாசம்
உங்கள்சபைதனில்விரித்த கூந்தலடியம்மே
உயுத்தத்தில்முடிப்பேனென்று போனாள்வனவாசம்
நானொருத்தியல்லவோடி தலைவிரித்துநின்றேன்
இந்தஉலகமெல்லாந் தலைவிரித்தாச்சுதென்றுபோனாள்
வஞ்சனைகள்செய்ததொரு மன்னவரையெல்லாம்
ரணக்களத்தில்முடிப்பேனென்று போனார்கள்வனவாச[ம்
பத்தினியாள்விரித்ததொரு கூந்தலதுஅம்மே
பாரலோகம்விரிக்குமென்று போனாள்வனவாசம்

அருந்ததியாள்விரித்தொரு கூந்தலதுஅம்மே [சம்
நாளை-அனைவர்களும்விரிப்பாரென்று போனுள்வனவா
பதினெட்டாம்நாளையிலே படைபொருதும்சண்டை
பார்மன்னர்மார்மேலே முடிப்பாள்தலைகூந்தல்
அவனுடையஉதிரத்திலே அள்ளித்தலைசீவி
அவனுடையமார்பெலும்பைச் சீப்பாகவந்து
பக்கக்குடல்பதினாறும் பத்தினியாளெடுத்து
நாளைப்-படுகளத்தில்நாரிதலை முடிப்பாளோடிகூந்தல்
நூற்றொருவர்பூமுடியை தொறுங்கடித்தபின்பு
வேற்றுமைகள்தொலைந்ததென்று வருவாள்பாஞ்சாலி
பங்காளிதலைகளெல்லாம் பற்றறுத்தபின்பு
பத்தினியாள்தலைமுடித்துப் பாராளவருவாள்
அன்றோடேமுடியும் ஐவராதுசபதம்
அரசாளவந்திடுவா ராரணங்கேகேளும்
இந்தமட்டுஞ்சொன்னகுறி யினிப்பிசகாதம்மா
ஈஸ்வரனர்ஆணையென் றிருந்தாள்குறத்தி
கூடைதனில்செந்நெல்லு கொட்டலையோஅம்மே
கொம்பனையேஎன்பனைக்குக் கொண்டுநானடப்பேன்
எட்டொருநாளாச்சுதடி யித்தெருவேவந்து
என்கணவனெனைத்தேடி யிங்குவருவாண்டி
பத்தொருநாளாச்சுதடி வீட்டைவிட்டுவந்து
பத்தாவுமெனைத்தேடி வருவாரடிபெண்ணே [வாள்
வேறு-என்றுமவருரைக்க வதுசொல்வாள்பெருந்திரு
குறத்திசொன்னதெல்லாங் கொற்றவர்க்கேதற்காலம்
எங்களுக்குற்ற குறியொன்றும்சொல்லலையே
மன்னவருக்குற்றகுறி மயிலனையேசொல்லலையோ
பஞ்சவருக்காக வுரைத்தாயேபத்தினியே
காடாண்டபஞ்சவர்கள் நாடாண்டுவருவாரோ
ஐவரும்வந்துமல்லோ அரசாண்டிருப்பாரோ
நூலார்கடுந்திரளார் நூற்றொருவரானவரும்
இருந்தரசையாள்வாரோ எனக்குரையுங்கட்டுவச்சி
நிச்சயமானகுறி நீயுரையுங்கட்டுவச்சி
அந்தவுரைகேட்டு அருங்கிளியாளேதுசொல்வாள்
நான்சொன்னகுறிகளெல்லாஞ் செவிதனக்கேறலையோ
பார்வதிக்குமீஸ்வரருக்கும் பகுந்துகுறியுரைத்தேன்
வேலவர்க்குவள்ளியர்க்கும் வேணகுறியுரைத்தேன்

இந்திரர்க்குந்தேவியர்க்கும் இசைந்துகுறியுரைத்தேன்
இராயர்க்குஞ்சீதையர்க்கும் நல்லகுறியுரைத்தேன்
பிரம்பாசரஸ்வதிக்கும் வேண்டுங்குறியுரைத்தேன் [லே
அந்தந்தத்தேவரெல்லாம் அடுத்துமெனேக்கேட்டதில்
இன்னமின்னஞ்சொல்லுமென்று ஏந்திழையேகேட்கி
ஆனல்கேள்சொல்லுகிறே ஞாரணங்குநாயகமே [ருய்

குறம்

நாகக்கொடிதனேப்படைத்த நறுநுதலாய்கேளாய்
உன்-நாயகராளுவதைச் சொல்லுகிறேன்கேளம்மே
நூலால்கடுந்திரளார் நூற்றெருருவரம்மே
நுட்பமுடனரசாண்டு அற்பமதில்வாழ்வார்
பத்துத்திங்களுண்டடியே பாராளமன்னர்
பதினோராந்திங்களிலே படைமுகத்துமாள்வார்
எட்டிரண்டுதிங்கள்மட்டு மிகுந்தரசையாள்வார்
இனியதொருதிங்களிலே யிறந்திடுவார்முடிகள்
பத்தினியார்சாபத்திலே பாரதப்போர்தன்னில்
பஞ்சவர்கள்கையாலே மாண்டிடுவாரம்மே
அருங்கிளியாள்சாபத்திலே அரையர்களுமம்மே
ஐவரதுகையாலே மாண்டிடுவார்சொன்னேன்
படுகளத்தில்மாண்டபின் கேளடிபெண்ணே
பஞ்சவர்களரசாள்வார் பார்முழுதுமல்லோ
அருங்கிளியாள்கூந்தல்தனே ஆங்கெணவேமுடித்து
ஐவருடன்வாழ்ந்திருப்பாள் ஆரணங்கேகேளும்
என்றுமிந்தக்குறத்திசொல்ல இளங்கொடியாள்கேட்டு
இடிவிழுந்தாற்போல்முழுதும் ஏங்கியழுதாளே
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்நாயகமும்

வேறு

மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதாள்
ஆர்கடகக்கையாலே அறைந்துகொண்டுதானழுதாள்
மோதிரத்தன்கையை முகத்திலறைந்துகொண்டாள்
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள்தானழ
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து
கொப்புத்திருத்தியல்லோ கோவைமிகத்திருத்தி
வளையலதுதிருத்தி வாளிமிகத்திருத்தி
பூணாரமேசகத்தைப் புழுதிமிகத்திருத்தி [ள்
ஆறவிடுமென்றுசொல்லி அவளெழுந்துபோய்நடந்தா

கட்டார்கருங்குழலாள் காந்தாரிமுன்னேவந்து
செம்பொன்திரை நீக்கிச் சிக்கெனவேதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பியெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
காந்தாரிநாயகிக்குக் கன்னியருமேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறத்தியங்கேவந்ததுவுங் குறிகளுரைத்ததுவும்
கானக்குறத்தியங்கே கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்பஞ்சபாண்டவர்கள் அரசாளப்போகிறதும்
மன்னர்பஞ்சபாண்டவரும் வையகத்தையாளுவதும்
காசிநாடாளுங் கருணரிங்கேமாளுவதும்
நூலார்கடுந்திரளார் நூற்றொருவர்மாளுவதும்
பாஞ்சாலன்பெற்றகன்னி பத்தினிதுரோபதையாள்
கொத்தார்குழலியவள் கூந்தல்முடிப்பதுவும்
அத்தனையுஞ்சொல்லி யுரைத்தாளந்தக்கட்டுவச்சி
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தான்கேட்டு
ஆனந்தமாறி அழுதுபடுத்தாள்காண்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்றாள்
கட்டார்கருங்குழலி காந்தாரிதான்கேட்டு
குறியுரைக்கவந்ததொரு கொம்பனையாள்கட்டுவச்சி [ள்
குறிசொல்லிபோனாளோ கொம்பனை நீசொல்லுமென்று
அங்கேயிருக்காளோ ஆரணங்கேசொல்லுமென்றாள்
அந்தவுரைகேட்டு அழகானதாதியும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகையில்
குறிகளுரைத்து மிருக்கின்றாள்பைங்கொடியும்
அந்தவிசேஷம் அறிக்கையிடவந்தேனென்றாள்
குருடனதுதேவி கொம்பனையுந்தான்கேட்டு
அவளாங்காரக்கோபமுடன் அடித்தெழுந்திருந்து
தாதிமுகம்நோக்கித் தையலருமேதுசொல்வாள்
தேசத்தையாளுந் திரியோதிரனார்க்கு
சொல்லிநீவாடியென்று மெல்லிநடக்கலுற்றாள்
அறிக்கையிட்டுவாருமென்று ஆரணங்குவாராளே
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரம்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி. [று
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகைசென்
மருமகளைத்தான்பார்த்து மகராசியேதுசொல்வாள்

என்கா‌ண்மருமகளே யிந்தவிதியுனக்கு
இவளார்காணும்கட்டுவச்சி அடைடையுரைத்தவள்கா
எங்கிருந்தெங்குவந்தாய் இந்தக்குறியுரைக்க [ண்
என்றுபவளுரைக்க ஏதுசொல்வாள்கட்டுவச்சி

குறம்

ஆதிசிவனேடிருந்து வந்தேனடியம்மே
அத்திபுரங்குறியுரைக்க அழகாகவந்தேன்
கொச்சிமலேகுடியிருக்கும் குறத்தியர்நாங்கள்
குமரேசர்வள்ளியர்க்குங் குறியுரைப்போம்நாங்கள்
பச்சைமலேகுடியிருக்கும் குறத்தியடிநாங்கள்
பரமசிவனுமையவட்குங் கைபார்க்குங்குறத்தி
மலேயாளந்தேடி மகிழ்ந்துகுறிசொன்னேன்
வளமானசெந்நெலெல்லாம் வாங்கிவந்தேனம்மே
அல்லியதுசீமையிலே ஆனகுறஞ்சொன்னேன்
அல்லியவள்மகிழ்ந்து நெல்லுமள்ளியிட்டாள்
வம்பருக்கும்தும்பருக்கும் வாய்த்தகுறிசொன்னேன்
கம்பெனக்குஅள்ளியிட்டாள் கட்டழகியம்மே
ஆருயிரம்பாண்டியர்க்கு அழகுகுறிசொன்னேன்
சீரானகேழ்வரகைத் திறமுடனேயளித்தார்
இந்நாட்டுக்குறியுரைக்க இங்குவந்தவிடத்தில்
எந்தனுக்குப்பெருந்திருவாள் என்னகொடுப்பாளோ

வேறு

இப்படியாய்ச்சொல்லி யிருக்கின்றுள்கட்டுவச்சி
கட்டார்குழலியரும் காந்தாரிதான்கேட்டு
குறத்திமுகம்நோக்கி கொம்பனையுங்கூறுகிருள்
முன்னேயுரைத்தகுறி சொல்லுங்காண்மொய்குழலே
என்மருமகட்குசொன்னகுறி எந்தனுக்குச்சொல்லுமெ
அப்போமலேக்குறத்தி யாரணங்கேதுசொல்வாள் [ன
முறத்திலேசெந்நெல்கொண்டு வாருங்காண்மொய்குழ
செந்நெலதுகொண்டு சொல்லுவோங்குறியுனக்கு [லே
அப்போதுகாந்தாரி ஆரணங்கேதுசொல்வாள்
கொத்துச்சம்பாமுத்துச்சம்பா குடமல்லிச்சம்பாவும்
கொண்டுவந்துபொன்முறத்தில் கொட்டினாள்குறத்திமு
அப்போதுகட்டுவச்சி ஆரணங்குதான்பார்த்து [ன்னே

குறம்

நெல்லேயவள்கைப்பிடித்து நேர்ந்தகுறியென்பாள்

பொற்புடையபாஞ்சாலி புதுமைக்குறியுரைப்பாள்
மூக்கணஞர் தன்மகனே முன் நடத்தவேண்டும்
மூஷிகவாகனரே குறியுரையுமையா
விகடசக்ரக்கணபதியே வாக்கருளவேண்டும்
வேலவரேவள்ளியரே வாக்கருளவேண்டும்
பச்சைமலைத்தாயாரே பாவைக்குறியுரையும்
பரமசிவன்பார்வதியே பகர்ந்துகுறிசொல்லும்
அச்சுமலைகொச்சுமலை நடந்துகுறிசொல்லும்
நாராயணலட்சுமியே நாவில்வந்துரையும்
தெய்வங்களை நினைத்தாலே சிலிர்த்துக்கொள்ளுதுடம்பு
தேகமெல்லாம்நடுங்குது தேன்மொழியேகேளும்
குறக்கூடை குலுங்குதடி கொம்பனையேகேளும்
கோலவிழி துடிக்குதடி குறிகள்சொல்லுவேன்கேளும்
முன்னடந்தகாரியங்க ளொன்றுரைப்பேனம்மே
முத்துமுடிப்பாண்டியர்க ளரசாளும்நாளில்
பத்தாண்டுசென்றபின்பு பாவையரே நீயும்
பார்மீதிலேவளர்ந்து சமைந்தாயடி பெண்ணே
உந்தனுக்குக்கைபார்த்த சாஸ்திரிமாரம்மே
உனக்குச்சொன்னலக்ஷணங்க ளுண்மையென்றுசொல் [வேன்
மண்டலத்தையாளுகிற மன்னர்களானாலும்
மகாதேவர்முதலான தேவர்களானாலும்
தெய்வபதியாளுகிற தேவர்களானாலும்
தென்னிலங்கையாளுகிற ராட்சதரானாலும்
உன்னைத்தொட்டுமணம்புரிந்தா லுடனேயவர்மாள்வர்
என்றுரைத்தார்வேதியர்க ளிச்சபையிலம்மே
என்குறிகள்பொய்யோடி இன்னமுண்டுசொல்வேன்
அதுவறிந்தவுன் தகப்ப னுயாசப்பட்டு
அரசாண்டிருக்கையிலே அங்கொருநாளம்மே
அருகிருந்தமந்திரிக ளாலோசனைசெய்து
அரசனது முகம்நோக்கி யவர்களெடுத்துரைப்பார்
மன்னவரே நீர்கேளும் ஆலோசனையொன்று
மகளாரைமாலையிட்ட மர்மம்சொல்லுகின்றேன்
மணமாலைபந்தலிட்டு மகளாரைவைத்து
மன்னரேயாட்டுக்கடாக் கொண்டுவந்துமல்லோ
ஆட்டுக்கடாகைதனிலே மங்கிலியந்தன்னை
ஆரணங்குகழுத்துதனில் தரியுமென்றுரைப்போ

நிமலியந்த அரசியர்க்கு நினைத்தகுறிசொல்வாள்
பொன்முறத்லைதக்கைபிடித்து புதுமையிதுஎன்பாள்
மங்கிலியந்தரித்தநொரு ஆட்டுக்கடாமாண்டால்
மன்னர்வந்துமங்கையரை மாலையிடுவார்கள்
அந்தவுரைகேட்டு உன்தகப்பனம்மே
அப்படியேநல்லதென்று அவனுஞ்சம்மதித்து
பதின்காதம்பந்தலிட்டு பாவையரேயுனக்கு
பாங்கானகடாக்கையில் தாலியதுதந்தார்
ஆட்டுக்கடாதாலியது உன்கழுத்தில்கட்டியம்மே
ஆறுசுக்கலாய்வெடித்து அந்தக்கடாமாள
அதுசமயந்தானறிந்து அந்தகனுமம்மே
ஆரணங்கைபெந்தனுக்கு அருளுமென்றுகேட்டான்
அதுகேட்டவுன்தகப்பன் நல்லதென்றுசொல்லி
சதுராகக்கலியாணம் தானுமங்கேமுடித்தான்
மண்டலத்தையவருமல்லோ வாண்டிருக்கும்நாளில்
மங்கையரேயுந்தனுக்கு மைந்தரில்லையென்று
மேன்மையுண்டுசெல்வமுண்டு ராச்சியங்களுண்டு
நாடாளமைந்தரில்லை யென்றிருந்தாயோடி
உன்-புருஷனுடன்பிறந்த பாண்டுமகாராஜன்
உண்மையுடனவர்மணந்த பத்தினியாள்குந்தி
குந்தியம்பாள்கர்ப்பவதி யானுளென்று நீயும்
கொள்ளாதவருத்தமுற்றாய் குமரியம்மே நீயும்
அடங்காதகோபமுடன் அங்கொருநாளம்மே
ஆற்றங்கரையில்ஸ்நானம்பண்ணி யருங்கிளியாள்வர
மின்னல்மின்னமழைபொழியும் வேளையதுவம்மே
மெல்லியரே நீபோய்ப் பலாமரத்தைச்சேர்ந்தாய்
அதிலிருந்துரிஷியாரு மணந்தாரோடியம்மே
அப்போதுகோபமது உண்டாச்சு துனக்கு
நூற்றொருமாதமது சென்றதல்லோபிள்ளை
பெறுவாயென்றுமேதான் ரிஷியுனக்குரைத்தார்
அந்தவுரைகேட்டு அகமகிழ்ந்துவந்தாய்
அப்போதுன்னோரகத்தி ஐந்துபிள்ளைபெற்றாள்
ஓரகத்திபிள்ளைபெற்றா ளென்றுசொல்லி நீயும்
உன்மனதுதாளாமல் வருத்தமுடனெழுந்து
எண்ணிவிசாரமுற்று உன்மனதுதாளாமல்
எந்திழையாள்பிள்ளைகளைப் பார்த்துமல்லோ நீயும்

ஆங்காரக்கோபமுடன் அறைந்துகொண்டுநீயும்
அடிவயிற்றிலிடித்துக்கொண்டு அடித்துக்கொண்டழு
கொண்ணூறு திங்களிலே தோகையரே நீயும் [காய
முன்னேயொருகுழவிதனை யெடுத்திடித்துக்கொண்டாய்
அப்போதுபிண்டமது கலங்கியல்லோவம்மே
அழகானவுதிரமெல்லாம் வெளியாச்சு தம்மே
நூற்றொருகிண்ணியிலே நுட்பமுடன்பிடித்து
நொறுங்காமல் விரைதனிலே அமுக்கிவைத்தாய்பெண்
நூற்றொருதிங்கள்சென்ற பிற்பாடுமைந்தர் [ணே
வேற்றுமைகளில்லாமல் வெளியானாரல்லோ
பொய்யோடிஎன்குறிகள் மெய்யோடிபுகலும்
பெருமையுள்ள அந்தகனார் மனுநீதியாலே
என்றுமந்தவிளங்குறத்தி தானுமங்கேநிற்க
இதுவறிந்தகாந்தாரி எண்ணமிடுவகையும்

வேறு

இப்படியாக இவர்களிருக்கையிலே
திரியோதிரன்சபைக்குச் சென்றதொருதாதியர்கள்
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றிறங்கிதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பியெழுந்திருந்து
சீர்கடகக்கையதனை சிரசின்மேல் தூக்கிநின்றாள்
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
தேசத்தையாளுந் திரியோதிரன்பார்த்து
யார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றான்
ஆர்பணியுமல்ல அடியேன்றிருப்பணிதான்
நீயிங்கேவந்த தெனக்கறியக்கூறுமென்றான்
தாமக்குழலாள் தாதியருமேதுசொல்வாள்
பேர்பெற்றுடைய பெருமாளேயுன்பணிதான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தாதியென்றாள்
அப்போதுதாதியரும் அழகாகவேதுசொல்வாள்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வாசலிலே
கட்டுவச்சிவந்ததுவும் கைபார்த்துச்சொன்னதுவும்
ஐவர்களாளுவதும் அரசமன்னர்ஆளுவதும்
பஞ்சவர்கள்ஆளுவதும் பார்மன்னர்ஆளுவதும்
பாஞ்சாலன்கன்னிதனை பதறத்துகிலுரித்ததுவும்
அத்தனையும்சொன்னாளே அழகானகட்டுவச்சி



ARCHIVES LIBRARY MADRAS
102143

அந்தவுரைகேட்டு அருங்கிளியுடாமியுமாய்
நூலால்கடுந்திரளார் நூற்றொருவர்பெண்டுகளும்
அவர்-அங்கேதலைவிரித்து அழுதுபுலம்புவதும்
அத்தனையுஞ்சொல்லி முடித்தாளவள்தாதி
தேசத்தையாளுந் திரியோதனன்கேட்டு
சிந்தைகலங்கித் திடுக்கென்றுமெய்கலங்கி
ஒன்றுமொழியாமல் உத்தமனும்வீற்றிருந்தான்
பாட்டனார்வீஷ்மரும் பாராளுந்துரோணரும்
சிறப்பாவிதுரனும் சீருள்ள காங்கயனும்
காஞ்சிநாடாளுங் கருணரும்தாமறிந்து
நூலால்கடுந்திரளார் நூறுபேர்தம்பிகளும்
கானக்குறத்தியரைச் சிறையிடுவோமென்றுசொல்லி
கால்விலங்குகைவிலங்கு கழற்றாப்பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மாளாப்பெருவிலங்கு
பெரும்விலங்குபோட்டார்கள் சிறையிலடைக்கவென்று
கன்னியரைத்தான்பிடித்துக் கழுவிலிடுவோமென்று
அல்லவருங்கூடி அழகாகவாரார்கள்
அரண்மனையேழுகட்டு மந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி [றூர்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்மாளிகைசென்
கானக்குறத்தியைக் கண்டுமந்தமன்னரெல்லாம்
நீ-ஆர்காணுங்கட்டுவச்சி அறியவுரையுமென்றார்
எந்தவூருங்களது எவ்விடமோசொல்லுமென்றார்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாநகரமாள்வதற்கு மாதவளேதுசொல்வாள்

O-,87 G:PU,D
N49

குறம்

எந்தனது திருநாடு கேட்கிறையோதம்பி
ஏற்றவிடஞ்சொல்லுகிறேன் யாவர்களுங்கேளீர்
சந்திரர்கள்ஆளுவதும் எந்தனதுநாடு
இந்திரனாராளுவதும் எந்தனதுநாடு
ஈரேழுபதினாலும் எந்தனதுநாடு
ஈஸ்வரனாராளுவதும் எந்தனதுநாடு
சொக்கரவராளுவதும் எந்தனதுநாடு
ஈஸ்வரியாளுவதும் எந்தனதுநாடு
அண்ணாமலையாராளுவதும் எந்தனதுநாடு
உண்ணாமுலையாளுவதும் எந்தனதுநாடு

கொலைகளவுமில்லாதாராளுவதும் எந்தன துநாடு
கோத்திரங்கள்சிர்தழைக்கும் எந்தன துநாடு
பொய்யுரையாராளுவதும் எந்தன துநாடு
புண்ணியனூர்வாசஞ்செய்யும் எந்தன துநாடு
முத்திரைமுத்தளக்கும் எந்தன துநாடு
முன்னோர்கள் தவப்புரியும் எந்தன துநாடு
கூடைதனில்கெம்பளக்கும் எந்தன துநாடு
கொற்றவர்களாளுவதும் எந்தன துநாடு
வான்முறைகள் தவறாமல் எந்தன துநாடு
வானவர்களாளுவதும் எந்தன துநாடு

வேறு

என்றுமவளுரைத்து நின்றாளேகட்டுவச்சி
நாட்டுவளப்பஞ்சொல்லி நாயகியாள் அங்கிருக்க
தேசத்தையாளுந் திரயோதிரன்கேட்டு
ஆனால்கேள்கட்டுவச்சி அடியேனொருவார்த்தை
கூடையில்முத்தளந்து கொட்டுவாரென்றுசொன்னாய்
முறத்தினில்முத்தளந்து மோருக்களிப்பேனென்றாய்
நீ-என்னகுறைவாகி வந்தீர்காண்எந்திழையே
ஏதுகுறைவாகி யித்தெருவிலேவந்தாய்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
மாநாகங்கொண்டவர்க்கு மங்கையருமேதுசொல்வாள்

குறம்

மழைகளில்லைசெந்நெலில்லை மண்டலங்கள்தோறும்
மகாராசரானவர்க்கு வருத்தங்களுண்டாகி
செந்நெலில்லைதுறவில்லை சீமையெங்கும்தம்பி
சிறப்பானவிளைவுமில்லை தேசங்கள்முழுதும்
அத்திநகாராசாள்வீர் அரசர்களுண்டென்றாள்
அதுகேட்டுசெந்நெல்பிச்சை வாங்கவந்தேன் நானும்
கொச்சைக்குறத்தி குறிகளிங்கேசொல்லி
குறப்பாடிசெந்நெல்பிச்சை வாங்கவந்தேனென்றாள்
சன்னசம்பாசின்னசம்பா சாதிலிங்கசம்பா
சதிரானகேழ்வரகும் வாங்கிவந்தேனென்றாள்

வேறு

அந்தவுரைகேட்டு அரவக்கொடியோனும்
மாதுமுகம்நோக்கி மன்னவனுமேதுசொல்வான்
குறத்திமுகமநோக்கிக் கொற்றவனுமேதுசொல்வான்

மா நகரமாளும்மகாராசன் பெண்டுகட்கு
பேடைமயிற்கண்ணுள் பெருந்திருவாள் நாயகிக்கு
என்னுச்சியர்க்குசொன்னகுறி அடியேனுக்குச்சொல்லு
மென்ருன், யாவர்க்கும்சொன்னகுறி| எனக்குரையுமென்
முன்னடந்தகாரியங்கள் மெல்லியரே நீயுரைத்து [ருன்
இனிமேல்நடக்கும்வகை எனக்குநீசொல்லுமென்ருன்
அந்தவுரைகேட்டு அழகானகட்டுவச்சி
கூறுவாள்கொம்பனையாள் கோதுங்கிளிபோல
வாய்திறந்துதானுரைப்பாள் மாதுநல்லகட்டுவச்சி

குறம்

நெல்விரைதான்பரப்பி நேர்ந்தகுறியென்பாள்
நீலகண்டதிமலியரே வாக்கருளவேண்டும்
காஞ்சிநகரதனில்வாழுங் காமாட்சியென்பாள்
காளையர்க்குகுறியுரைக்க வாக்கருளுமென்பாள்
உச்சிதமாய் நெல்லெடுத்து உண்ணுமுலையென்பாள்
பச்சைமலைத்தாயாரே வாக்கருளுமென்பாள்
ஆயவரும் அலர்மேலு மிங்கெனவேவந்து
அரசனுக்குக்குறியுரைக்க அருள்புரியுமென்ருள்
விக்கினவேலவரை வேண்டிமிகதொழுது
மெய்யானகுறியுரைப்பாள் மெல்லியருமங்கே
தேசமுழுதாளுகின்ற திரியோதிபமன்னு
சிறப்பானகுறியுரைப்பேன் சிந்தைமகிழ்ந்தருளும்
அவனிமுழுதாளுகிற அரசர்சிகாமணியே
ஆனகுறியானுரைப்பேன் அரனுருமறிய
முன்னடந்தகாரியங்களொன்றுரைப்பேன்கேளும்
நிலத்திலங்குபூமுடியார் நிறைந்திருக்கும்சபையில்
நினைத்துக்கொண்டாய்மைந்தனுக்கு கலியாணஞ்செய்ய
மன்னர்களைத்தானழைத்து மர்மங்களையுரைத்து
மகாராசர்சம்பந்தங்கள் வேண்டுமென்று நீரும்
பாரளந்தான் தன்மகளைக் கொள்வவென்று நீரும்
பலத்ததொருசபைதனிலே யெண்ணமிட்டீர் நீரும்
அதுவறிந்துஉன் தகப்பனுகாதென்றுசொல்ல
அறிவழிந்தசகுனியவனுகுமென்றேயுரைத்தான்
மண்டலத்தையாளுகிற மன்னர்களே நீயும்
மாயன்முகம்நோக்கி வந்தீரல்லவென்று
ஆயாதுசபைதனிலே அருகில்வந்திருந்து

அச்சுதரைப்பெண்கேட்க அவருஞ்சம்மதித்து
கோபாலப்பெட்டி நிரம்ப கொட்டுமென்றார்பணத்தை
கொற்றவனுமதற்கிசைந்து கொடுத்தாய்வெகுபணத்தை
கொட்டிவந்தபொன்னையெல்லாம் கோபாலரெடுத்து
கொப்பெனவேபதராக்கித் தூற்றிவிட்டார்காட்டில்
மறுபடியும்பொன்கொடுத்தால் பெண்கொடுப்பேனென்
மன்னவனே நீமகிழ்ந்து மன்னர்களையனுப்பி [றார்
களஞ்சியத்துப்பொன்னையெல்லாம் கொண்டுவரச்சொ
கரியமாலானவர்க்குக் கணக்குடனே தந்தாய் [ல்லி
அதுவறிந்துசுந்தரியைத் தாரேனென்றுசொன்னார்
அடைவாகமுகூர்த்தமிட்டு அனுப்பிவைத்தாருன்னை
அவரெட்டாநாளையிலே முகூர்த்தமென்றுசொல்ல
எம்பெருமாள்தானுரைக்க ஏகிவந்தீர் நீரும்
அம்பலத்துச்சபையிலுள்ள யாவர்களும்நீரும்
ஐம்பத்தாறுதேசத்து மன்னர்களும்வந்தார்
இலக்குணற்குமணக்கோலம் நன்றாகச்செய்து
நாடாளும்ராசர்களும் நலமுடனேகூடி
மூன்றுநாளாகையிலே முடிமன்னரெல்லாம்
முத்துமுடிராசருடன் பயணமிட்டுவந்தீர்
ஆயராதுபதிநோக்கி அனைவோர்களும்வந்து
அரிராமர்தன்கொலுவி லிருக்குமந்தவேளை
அர்ச்சுனனரீன்றெடுத்த அபிமன்னன்தானும்
அவனுடையதோழர்களும் அங்ஙனமேவந்து
மணவரையில்வீற்றிருந்த இலக்குமணனையிழுத்து
மன்னர்சபைமுன்பாக மயிர்பிடித்துச்சிறைத்தார்
ஐந்துநல்லகுடுமிவிட்டு அவன் தலையைச்சிரைத்து
அரசாணிக்காலுடனே யிலக்குணனைக்கட்டி
மாயவரைப்பிடித்திழுத்து யரத்தோடேகட்டி
மன்னவரேயுங்களைத்தான் மண்டைநொறுங்கடித்து
மாயன்மகள்சுந்தரிக்கு மணமாலைசூட்டி
மறுபடியுந்தன்பதிக்கு மன்னன்வந்துசேர்ந்தான்
அபிமன்னன்போனபின்பு அரசர்களே நீங்கள்
ஆயன்பதிவிட்டெழுந்து அபிமானங்குலைந்து
வாளபிமன்செய்ததனால் மானபங்கமாகி
மரியாதைதாழ்வாகி மண்டலத்தேவந்தீர்
பொய்யோதான்என்குறிகள் மெய்யோநீபுகலும்

பூமிமுழுதாளுகின்ற புண்ணியனேயென்ருள்
முன்னடந்தகாரியங்கள் இன்னமுண்டுசொன்ஞல்
முடியாதுபொழுதுமில்லை மன்னவரேகேளும்
முன்னடக்குங்காரியங்கள் எடுத்துரைப்பேன்கேளும்
ஈரேழுலகளந்த ஈஸ்வரனறிய
பஞ்சவரைக்கொண்டுவந்து பாரசபைநிறுத்தி
பங்கப்படுத்தியல்லோ பார்விலங்கைப்போட்டீர்
ஐவர்களைச்சூதாடி யறைதனிலேயடைத்து
ஆரணங்கைகொண்டுவந்து அம்பலத்தில் நிறுத்தி
ஐவரதுதேவிதன்னை அம்பலத்தில் நிறுத்தி
அனைவோருந்தாமறிய ஆடையுரிந்தீர்கள்
பத்தினியாள்மனதெரியப் பாரசபைதனிலே
பரமசிவன்பார்வதியைச் சாட்சிவைத்தாளங்கே
மாதுநல்லாள்மனதெரிய மன்னர்சபைதனிலே
மாயவரைச்சீதையரை சாட்சிவைத்தாளங்கே
பொற்கொடியாள்மனதெரிய போர்மன்னர்சபையில்
பிரம்மாசரஸ்வதியைச் சாட்சிவைத்தாளங்கே
வில்புருவங்கண்ணுளும் விரிந்ததலையுடனே
மீளாதசாபமிட்டுப் போனுள்வனவாசம்
மன்னுவுன்பூமுடியை மண்ணில்விழத்தறித்து
மயிர்முடிப்பேனென்றுசொல்லி போனுன்வனவாசம்
கொண்டைமுடிப்பேனென்று குடல்தன்னையெடுத்து
பன்னிரண்டுயோராண்டு சென்றவுடன் மன்னு
பாரதப்போர்முடிக்கையிலே பஞ்சவர்களைவர்
ஆயனொருசாரதியாய் அர்ச்சுனன்தேரேறி
அரசுமன்னர்பூமுடியை அடங்கலுமேதறித்து
நூற்றொருவர்பூமுடியை நொறுங்கடித்தபின்பு
நொடிப்பொழுதிலுன்முடியை தரையில்விழவடித்து
பீமனதுதெண்டாலே நீமடிந்தபிறகு
விபரீதப்பாரதப்போர் முடிந்ததென்றுசொன்ஞள்
பாஞ்சாலன்எக்கியத்தில் வந்துதித்தகன்னி
படுகளங்கள்முழுமையுந்தான் பாஞ்சாலியறிந்து
பாவையருந்தன்கூந்தல் வாரிமுடிப்பாளே
கூந்தல்முடிந்தானபின்பு கொற்றவர்களைவர்
கோடானயாகஞ்செய்து குவலயத்தையாள்வார்
கருணனுடமைந்தனவன் காளைவிஸ்வகேது

கனத்தநல்லமுடி சூட்டி அத்திபுரமாள்வான்
அங்கவனநாடனைத்தும் அவனாளப்போறான்
அவனியெல்லாம்பஞ்சவர்களாண்டுமிருப்பார்கள்
மன்னரந்தப்பட்டணத்தை யரசாளப்போறார்
மாளாதபெருநகரம் நீங்களுமேயாள்வீரா
ஐவரந்தபஞ்சவர்களரசாண்டுவாழ்வார்
அழியாதபெருநகரம் நீங்களுமேயாள்வீர்
என்றுமந்தக்கட்டுவச்சி எடுத்துரைத்தாளங்கே
இதுகேட்டுதிரியோதிரன் ஏங்கிமுகம்வாடி

வேறு

குறத்தியுரைகேட்டு கொற்றவனும்வேறுபட்டு
கட்டுவச்சிதானுரைக்கக் காளையதுகேட்டு
அவன்சிந்தையனமகிழ்ந்து திடுக்கிட்டுமெய்மறந்து
மற்றுமொருநினைவால் மன்னவனும்கோபமதாய்
காணக்குறத்தியல்ல கட்டுவச்சிதானுமல்ல
பஞ்சவரைமாலையிட்ட பாஞ்சாலியென்றறிந்து
ஐவரையுமாலையிட்ட ஆரணங்குளென்றறிந்து
அங்குள்ளசேவகரை ஆணழகன்தானழைத்து [றான்
தூதுவரைத்தானழைத்துத் தொழுவிலங்குபோடுமென்
கால்விலங்குகைவிலங்கு கழற்றாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
தூக்காவிலங்குமிட்டுத் தொழுவிலேபோடுமென்றான்
ஆரணங்குகுறத்தியரை அடையுங்கிடங்கிலென்றான்
அப்போது தூதுவர்கள் அங்ஙனமேதுசெய்தார்
கட்டழகிமாதினுக்கு கழற்றுவிலங்குமிட்டு
ஆரணங்குமாதரையு மறையிலேதள்ளிவந்து
சேர்விலங்குபூட்டியல்லோ சிறையிலடைத்தார்
மாளாவிலங்குமிட்டு மங்கையரைத்தானடைத்தார்
இப்படியாகஇவள் இங்கேயிருக்கையிலே
தோராவடிவழகி துரோபதையுமேதுசெய்தாள்
மாயவரைத்தானினைந்து மங்கைபுலம்புகிறாள்
கோவிந்தாவைகுந்தா கோபாலாவாருமென்றாள்
அம்பலத்துவாசலிலே அன்றுவந்துகாத்தீரே
அப்போதுகாத்தாற்போல் இப்போதுகாருமையா
ஆரணங்குளந்தனையும் ஐவரிடஞ்சேருமையா
ஆனையைக்காத்தாற்போ லடியாளைக்காருமையா

மைந்தரைக்காத் தாற்போ லடியாளைக்காருமையா
என்றுபுலம்பி யிருக்கிறாள் துரோபதையும்
அந்தச்சமயமது அறிந்தாரேயெம்பெருமாள்
மாயன்பெருமாள் மனதில் நினைவாகி
தேசத்தையாளுந் திரியோதிரன்மாளிகையில்
மாநாகங்கொண்ட மகாராசன்வாசலிலே
ஐவரதுதேவி ஆரணங்குதுரோபதையாள்
குறமாதைப்போல் கொம்பனையாள்வேஷங்கொண்டு
கட்டுவச்சிப்போலக் கன்னிவடிவெடுத்து
சகாதேவராசனைத் தகுந்தகுழந்தையாக்கி
மைந்தனானவனை மைந்தனுருவாக்கி
ஐவரதுதேவி அபிஷேகப்பத்தினியாள்
குறத்திவடிவாகிக் கொம்பனையாள்வந்ததுவும்
கட்டுவச்சிபோலாகக் கன்னியிங்கேவந்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள் நாயகிக்கு
கைப்பார்த்துக்கட்டுவச்சி கனத்தகுறிசொன்னதுவும்
முன்னடந்தகாரியங்கள் முழுமையுமுரைத்ததுவும்
இனிநடக்குங்காரியங்கள் பரவுமுரைத்ததுவும்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்தானறிந்து
அழுதுபுலம்புவது மத்தையர்க்குச்சொன்னதுவும்
மண்டையுடைத்தழுது மாமியர்க்குச்சொன்னதுவும்
மாமியதுவறிந்து மாளிகைக்குவந்ததுவும்
குறத்தியவள்மொழியைக் கொம்பனையாள்கேட்டதுவும்
மயிலனையாள் தன்வார்த்தை மாமியவள்கேட்டதுவும்
மைந்தருக்குச்சொல்லி அனுப்பினதுமங்ஙனமே
மாநாகங்கொண்ட மகனுக்குரைத்ததுவும்
நாகக்கொடிபடைத்த ராசனறிந்ததுவும்
குறத்தியருகில்வந்து குறியுரைக்கச்சொன்னதுவும்
பாவிதிரியனுக்கு இசைந்துகுறிசொன்னதுவும்
பாவிதிரியனுக்கு பாவைகுறம்சொன்னதுவும்
கேட்டுஇடிவிழுந்து கீர்த்தியில்லாமன்னவனும்
அருப்பாவிசண்டாளன் ஆலோசனைகள்செய்து
பஞ்சவர்கள்தேவி யென்று பாவியறிந்துகொண்டு
ஐவரதுதேவியென்று அருப்பாவிதானறிந்து
பாஞ்சாலன்கன்னியர்க்கு பாரவிலங்கிட்டதும் [ம்
அருங்கிளியாள் துரோபதையை அறையிலடைத்ததுவு



அத்தனையும்தாமறிந்து ஆயரெழுந்திருந்து
கனமோசம்வந்ததென்று கரியமால்தானெழுந்து
துவாரகைவிட்டுமல்லோ சுவாமியங்கேவாராராம்
வேர்க்கவிருவிருக்க விராடபுரத்தில்வந்து
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
எவருமறியாமல் இங்கொருவர்காணாமல்
இருவருக்குமுன்பிறந்த இளவிசயன்முன்னேவந்து
அருச்சுனனார்முன்னேவந்து ஆயருமேதுசொல்வாள்
வாள்விசயன்முன்னேவந்து மதிமோசம்வந்ததுகாண்
அர்ச்சுனராஜாவே அனர்த்தம்வந்துநேர்ந்ததுகாண்
வாள்விசயாமன்னவனே மதிமோசம்வந்ததுகாண்
கொத்தார்குழலியரைக் கொடியசிறையில்வைத்தான்
கால்விலங்குகைவிலங்கு இட்டுச்சிறையில்வைத்தான்
காவலுள்ள துரோபதையைக் கடுகவழைக்கவேண்டும்
நீகொற்றவனார்வீரியரே குறவனைப்போல்வாருமென்றார்
அப்போதுவாள்விசயன் அரிராமர்தன்வாயால்
கொற்றவனார்வீரியருங் குறவேஷமானாரே
அணிற்பிள்ளையைக்குத்தும் ஆண்மைக்குறவனானார்
காடிபுலிகுத்தும் கன்னக்குறவனானார்
தட்டிவரிந்துகட்டி சல்லடமுமேற்பூண்டு
வில்லம்புகைப்பிடித்து வேந்தன்முதுகிணிந்து
கறிவேப்பிலையெடுத்துக் கடுகெனவேதோளிலிட்டு
சுண்டைக்காய்வற்றலது சுக்கன்வற்றல்தானெடுத்து
காட்டுக்களாக்காயும் கடுகெனவேகைபிடித்து
குறவனைப்போலாக வாரானேகொற்றவனும்
கன்னக்குறவனைப்போல் வாரானேகாளையவன்
காடுசெடி தாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
அத்திபுரஞ்சேர்ந்தா னணழகுமன்னன்
இராசமன்னர்வீதியிலே நடந்துவாரான்வாள்விசயன்
சிங்கியைக்காணாமல் தேர்விஜயன் தேடிவந்தான்
குறத்திதனைக்காணாமல் குறவன்தேடிவாரான்
அத்திபுரம்வீதியிலே ஆணழகனேதுசொல்வான்
சுண்டைக்காய்கொள்வீரோ சுக்கங்காய்கொள்வீரோ
காட்டுக்களாக்காய் கன்னியரேவேண்டுமோதான் [டோ
கிலுகிலுப்பைகொள்வீரோ கன்றுதும்புகொள்வாருண்

கொற்றவர்கள்வீதியிலே குறத்திதனைக்கண்டதுண்டோ
மன்னவர்கள்வீதியிலே மங்கையரைக்கண்டதுண்டோ
மைந்தரும்மாதருமாய் மாளிகைவிட்டுவந்தார்கள்
எட்டுநாளாச்சுதையா இளங்குறத்திவீடுவிட்டு
பத்தொருநாளாச்சுதையா பாவைநல்லாள்வீடுவிட்டு
கைலாயம்சென்று கடுகெனவேவீடுவந்தாள்
வைகுந்தம்போயிருந்து வடிவழகிவீடுவந்தாள்
எமலோகம்போயிருந்து இளங்கொடியாள்வீடுவந்தாள்
நாகலோகம்போயிருந்து நாயகியாள்வீடுவந்தாள்
ஐம்பத்தாறுதேசமும் இவளறியா நாடுமில்லை
அவள்எங்கேசென்றாலு மிளங்கொடியாள்வந்திடுவாள்
எட்டொருநாளாச்சுதல்லோ என்னையாள்வீடுவந்து
பத்தொருநாளாச்சுதல்லோ பத்தினியாள்வீடுவந்து
ஏச்சுக்குவச்சல்லோ என்குலத்தார்தாமறிந்தால்
ஓரகத்திமச்சினிமார் உதாசினங்கள்சொல்லிடுவார்
மாமியார்தானறிந்தால் மட்டுமருங்குவையார்
மாசில்லாவப்மிசத்தில் மருவுபடநாளாச்சு
ஆரணங்குதன்னாலே அழும்புவரநாளாச்சு
அழகுள்ள கன்னியென்று அடக்கிவசங்கொண்டார்கள்
வடிவுள்ள கன்னியென்று வையகத்தார்கொண்டுசென்று [ர்
பாரப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்கள்
சொக்குப்பொடிமருந்தை சுந்தரிக்குப்போட்டார்களோ
மந்திரத்தால்தந்திரத்தால் மாதையழைத்தார்களோ
ஆண்மைவலிமையினா லடக்கிவசம்கொண்டார்களோ
என்றுசொல்லியக்குறவன் ஏங்கியழுதுவாரான்
நாலால்கடுந்திரளார் நாற்பெருருவர்வீதியெல்லாம்
கன்னியரைத்தேடியலைோ காளையழுதுவாரான்
பேடைமயிற்கண்ணாள் பெருந்திருவாள்வீதியிலே
காட்டுக்குறவனவன் கதறிப்புலம்புகிறான்
குறத்தியைக்காணாமல் கூவியழுகிறானே
வாடிப்புலம்புவதும் மட்டுமிதங்களில்லை
சொல்லிப்புலம்புவதும் செவிகேட்கமுடியவில்லை
அங்கிருக்கும்தாதியர் வளணியிழையார்ஓடிவந்து
ஆர்காணும்நீகுறவா அழுதுபுலம்புவதேன்
எவர்காணும்நீகுறவா யிங்கேபுலம்புவதேன்
அழுதவயணமதை ஆரணங்குசொல்லுமென்றாள்

புலம்பும்வகையேது பண்ணியனேசொல்லுமென்றாள்
அப்போதுகுறவனவ னழகாகவதுசொல்வான்

குறம்

கன்னியெங்கள்கட்டுவச்சி காளைகுறமுறைக்க
கண்டுவந்தவீதிகளில் குறமுறைக்கவந்தாள்
மாலையிட்ட நாள்முதலாய் என்னைப்பிரிந்ததில்லை
மாதுநல்லாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
கூறையிட்ட நாள்முதலாய்க் கொற்றவனைப்பிரியாள்
கொம்பனையாள்வீடுவந்து வாரமொன்றதாச்சே
எட்டொருநாளாச்சுதம்மா என்வீடுவந்து
இளங்கொடியாளிருப்பிடந்தான் எங்கேநானறியேன்
பத்தொருநாளாச்சுதம்மா பாவைமனைவந்து
என்பத்தினியாளிருக்குமிடம் பாவியும்நானறியேன்
கன்னியரைக்கண்டாலே கடுகெனவேயழைத்து
கலிராமர்தன்னருளால் கடுகிமனைபோவேன்
உத்தமியைக்கண்டாலே யுடனே நானழைத்து
உம்பர்பிரான்தன்னருளால் வீடுபோய்ச்சேர்வேன்
கன்னியரைத்தேடுவது கலிராமரறிந்தால்
கனமோசம்வந்திடுமே எங்கள்குலந்தனக்கு
பத்தினியைத்தேடுவது பரமசிவனறிந்தால்
பழிபாவம்நேர்ந்திடுமே எங்கள்குலந்தனக்கு
மெல்லியரைத்தேடுவது வள்ளிவேலரறிந்தால்
வெகுமோசம்வந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
கொம்பனையாள்வீடுவர வில்லையென்றேயுரைத்தால்
குடிபழுதுவந்திடுமே குறக்கூட்டந்தனக்கு
எச்சானசாதியல்லோ எங்கள்குறச்சாதி
ஏழானசாதியர்க்குள் கீழ்ச்சாதிநாங்கள் [வோம்
காக்காய்தின்போம்கழுகுதின்போம் காட்டோணான்சுடு
கன்னியரைவிலைக்குவிற்று அமுதுபொசியோமே
மானைக்குத்திவிருந்திடுவோம் மாயக்குறச்சாதி
மனையாட்டிதன்னைவிற்று அமுதுபுசியோமே
ஏனம்தின்போம்மிருகந்தின்போம் எங்கள்குறச்சாதி
ஏந்திழையைச்சோரவிட்டு அமுதுபுசியோமே
பாரப்புலிமிருகங்குத்திப் பலத்தவிருந்திடுவோம்

பத்தினியையவிலக்குவிற்று அன்னம்புசியோமே
எந்தன் குறத்திதனை யாரழைத்தாரோடி
இழுத்தவரைக்கண்டாலே இருதுண்டாய்ப்பிளப்பேன்
கன்னிதனைத்தொட்டிழுத்த காளையரைக்கண்டால்
கண்டதுண்டமாய்தறித்து கனத்தவுயிர்வதைப்பேன்
அரண்மனையும்ஆஸ்தானம் அடங்கலுந்தானிடித்து
அவனுடையதேவிகளை அழைத்திடுவேன்பெண்டாய்
கோபுரமும்கோயில்களும் கொத்தளமுமிடித்து
கொற்றவனார்தேவிகளைக் கூடியணைந்திடுவேன்
கண்டேனேயாமாகில் கண்டதுண்டஞ்செய்வேன்
கன்னியரையழைத்துக்கொண்டு கடுகிபனைபோவேன்

வேறு

என்றுமவருரைக்க இளங்கொடிமார்தான்கேட்டு
கால்நடுங்கிகைநடுங்கி கடுகெனவேயோடிவந்து
மாநகரமாளும் மகாராசன்தேவியர்க்கு
தெண்டனிட்டுதாதியர்கள் சீக்கிரமேயேதுசொல்வார்
வணங்கிநமஸ்கரித்து மாதருக்குஏதுசொல்வார்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை
மயிலணையேஉன்னுடைய வாசற்படிகாத்திருந்தேன்
தேனின்குழலாளே தெருவாசல்காத்திருந்தேன்
அங்கேயொருகுறவன் அழுதுபுலம்பிவந்தான்
கட்டுவச்சிதன்னைத்தேடி கன்னக்குறவன்வந்தான்
ஆரணங்கைக்காணாமல் அழுதுபுலம்பிவந்தான்
மயிலணையைக்காணமல் மன்னன்புலம்பிவந்தான்
அழுதகுரல்கேட்டு ஆணழகாவென்னென்றோம்
மன்னா அழுதவகை வாய்திறந்துசொல்லுமென்றோம்
அந்தக்குறவன் தானுரைக்க வார்த்தையைக்கேளுமென்
ருள், மலைக்குறவன்தானுரைத்த வார்த்தையைகேளுமெ
கட்டுவச்சிநாயகியைக்கைதொட்டுஇழுத்தவரை [ன்ருள்
குறத்தியைத்தானிழுத்து குகையிலடைத்தவரை [ருள்
கண்டேனேயாமானல் கண்டதுண்டஞ்செய்வேனென்
பார்த்தேனேயாமானல் பழுதுவருமென்றுரைத்தான்
அத்திபுரத்தையெல்லா படியோடிடிப்பேனென்ருன்
மகாராசன்பட்டணத்தை மண்ணோடேசாய்ப்பேன்

தங்கமதில்கோபுரத்தை தரையோடே சாய்ப்பேனென்று
ன், ஆண்சிறையும்பெண்சிறையு மவனைபிடிப்பேனென
றுன், ஆணைப்பிறந்தவரை அடப்பம்பிடிக்கவைப்பே
மன்னவர்களானாலும் மண்டைபினந்திடுவேன் [ன்
தேவர்களானாலும் சிதறடிப்பேன் என்றுரைத்தான்
அந்தவுரைகேட்டு ஆச்சியரேசொல்லவந்தோம்
குறவனுரைத்ததெல்லாம் கொம்பனையேகூற வந்தோம்
என்றுமிவளுரைக்க ஏதுசொல்வாள் பெருந்திருவாள்
மாநகரமாளு மகாராசனனவர்க்கு
நீங்களுரையுமென்றார் நித்திலங்குழூ முடியார்
அந்தவுரைகேட்டு அலங்காரத்தாதியர்கள்
அரண்மனையேழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
தேசத்தையாளுந் திரியோதிரன்முன்னேவந்து
சிம்மாதனத்தருகே சென்றுமேதெண்டனிட்டாள்
நீயார்பெண்ணேதாதி அறியவுரையுமென்றார்
ஆர்பணியுமல்ல வடியேன் திருப்பணிதான்
நீயிங்கேவந்ததெனக்கறியக்கூறுமென்றான்
தாதியவள்கைதொழுது தானங்கேஏதுசொல்வாள்
கால்விலங்குகைவிலங்கு கழற்றாப்பெருவிலங்கு
தோள்விலங்குமார்விலங்கு தூக்காப்பெருவிலங்கு
விலங்கிட்டுமூலையில் வைத்தீரேசெல்வியரை
கட்டுவச்சிதன்னையல்லோ காவலில்வைத்தீரே
கட்டுவச்சிநாயகனார் கன்னக்குறவனவன்
பத்தினியைத்தேடியல்லோ பார்மன்னர்வீதிவந்தார்
பூங்குறத்திதன்கணவன் வந்தான்குறவனவன்
கன்னிடைரைத்தொட்டிழுத்துக் காவலிலேவைத்தவரை
பத்தினியைத்தொட்டிழுத்துப் பாரசிறைவைத்தவரை
கண்டேனேயாமானால் கண்டதுண்டஞ்செய்வேனென்
பார்த்தேனேயாமானல்பற்றியிழுப்பேனென்றன் [றன்
இந்திரனேயானாலு மினிவிடமாட்டேனென்றன்
சந்திரனேயானாலும் சற்றும்விடேனென்றன்
தேவர்களானாலும் சிதறடிப்பேனென்றுசொன்னான்
அந்தவுரைகேட்டு அறிக்கைகயிட வந்தேனென்றாள்
தேசத்தையாளும் திரியோதிரன்கேட்டு
எண்ணுதுமெண்ணியல்லோ ஏங்கிமனந்தளர்ந்து

அருகிருக்குந்தோழனுக்கு ஆணைவனே துசொல்வான்
காசிநாடாளும் கருணபெருமாளே
குறத்திதனைத்தேடி வந்தானும்குறவனவன்
அந்தக்குறவனையு மடையுஞ்சிறையிலென்றான்
சீர்பதத்தையாற்றிச் சிறையிலடையுமென்றான்
கால்விலங்குகைவிலங்கு கழற்றாப்பெருவிலங்கு
விலங்கிட்டுமன்னவனை டுகிடங்கில்போடுமென்றான்
அந்தவுரைகேட்டு அங்குராயரே துசொல்வார்
பீஷ்மர்முகப்நோக்கி வேந்தர்எடுத்துரைப்பார்
இனிமெட்டுதிங்களிலே யினியபோருண்டாகி
பாரதப்போர தனில் படைமன்னர்சேவகமும்
வாள் விஜயன்சண்டையிலே மன்னவர்கள் சேவகமும்
அர்ச்சுனன்சண்டையிலே அரசர்கள்தைரியமும்
பீமனுடசண்டையிலே வில்வேந்தர் ஆண்மைகளும்
சகாதேவன்சண்டையிலே சாமார்த்தியமுள்ளவர்கள்
வெளிப்படநாளாச்சோ வேந்தர்படைமுகத்தில்
இதற்குள்ளேயிங்கொருபோ ஏன்தேடிக்கொள்ளுகிறீர்
நாளைக்குபோரு நடக்கவேதாமிருக்க
இப்போதுப்போரு எழுப்பவும்நியாயமுண்டோ
குறவனைத்தான்பிடித்துக் கிடங்கிலடைப்பானேன்
கிளையிலே வாசம்பண்ணும் வனக்குறவர்எல்லாரும்
இவனைச்சிறையில்வைத்தால் எவர்கள்முடிபோமோ
அத்திபுரமனைத்து மடங்கலுமண்ணுமோ
பஞ்சவர்கள்கையாலே மாளுதற்குமுன்பாக
குறவரிடகையாலே கொற்றவர்கள்மாளணுமோ
வனக்குறவர்கையாலே மன்னவர்கள்மாளணுமோ
குவலயத்தையாண்டமன்னர் குறவனாலேமாளணுமோ
வையகங்களுள்ளளவும் மாருதபோாகி
சூரியருள்ளளவும் தொல்லுலகில்பேராகும்
குறியுரைக்கவந்தவொரு குறத்தியவள்தனையும்
தேடியழைக்கவந்த தெளிந்தகுறவனையும்
அனுப்பிவிடும்அனுப்பிவிடும் அரசாளும்மன்னர்களே
வருத்தம் செந்நெல்கைகொடுத்து மங்கையையனுப்பிவிடு
சுட்டசெந்நெல்கைகொடுத்து தோகையரைப்போகவிடும்
போகவிடுமென்றுசொல்லி பொற்கருணர்தாமுரைத்தார்
அழகுள்ளமன்னர் அரசாளும்தான்கேட்டு

கருணர்உரைத்தது காரியந்தானென்றுசொன்னர்
தேசத்தழகன் திரியோதிரன்கேட்டு
சிறையிலடைத்துவைத்த சீரானகுறத்திதன்னை
கல்லறையில்உள்வைத்த மெல்லியரைவெளியேவிடும்
கனத்தசெந்நெல்கைகொடுத்துதோகையரைபோகவிடும்
சுட்டசெந்நெல்கைகொடுத்து தோகையரைபோகவிடும்
போகவிடும்போகவிடும் பொற்கொடியாள்நாயகத்தை
என்றவுரைகேட்டு எழுந்தாரே துதுவரும்
அரண்மனைஎழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
குறத்தியிருப்பிடத்தே வந்தார்கள்கொற்றவர்கள்
கட்டிவைத்தசெந்நெல் வறுத்துமேகைகொடுத்து
கொள்ளும்பயறு பங்கே எடுத்துவறுத்தார்கள்
அத்தனையுங்கைபிடித்து ஆணழகர்வெளிவாரார்
சுத்தியவர்கைபிடித்து தோகைமயிலனையாள்
இட்டவிலங்கை யிணைவிலங்கைதட்டிவிட்டார்
போட்டவிலங்குதனைப் பொட்டெனவேதட்டிவிட்டு
வறுத்தசெந்நெல்கைகொடுத்து மங்கையரேபோகுமெ
ன்றூர், கொடுத்ததொருசெந்நெல்தனை கொட்டினர்கூ
டைதனில், வாங்கிநடக்கையிலே மயிலனையாள்வது
சொன்னள்

குறம்

இன்னமொருபத்துதிங்கள் சென்றபிறகல்லோ
இவர்கள்முடிபூமியிலே யிறக்கவும்நாளாச்சு
பத்தினியாள்சாபத்தினல் பார்மன்னர்நீங்கள்
பஞ்சவர்கள்கையாலே மாண்டுமடியப்போறீர்
அருங்கிளியாள்சாபத்தினல் அரசரெல்லாம்நீங்கள்
ஐவரதுகையாலே அனைவர்களுமாளப்போறீர்
என்றுசொல்லிகுறத்தியவள் ஏகிவழிநடந்தாள்
இளவிஜயன்முன்னேவந்தாள் இளங்குறத்திதானும்
அர்ச்சுனனைக்கண்டவுடன் அருங்கிளியாள்தானும்
ஆவலுடன்குறவர்முன்னே அருங்கிளியாள்சொல்வாள்
அத்திபுரவீதியிலே அருங்கிளியாள்வந்தேன்
அவ்வீதிஅரசரெல்லாம் அழைத்தாரல்லோபெண்டாய்
மண்மீதில்அழுவீரென்று மன்னவர்க்குரைத்து

மற்றுமொருவீதியிலே குறம்பாடிவந்தேன்
குறம்பாடிவீதிவரக் கொப்பனைமார்கேட்டு
கொச்சைக்குறத்தியென்று எனையழைத்தார்மனைக்கு
மகாராசன்தேவியாம் மயிலனையாள் தனக்கு
மங்கையவள்கேட்டுமல்லோ மயிர்விரித்துஅழுதாள்
அத்தையவள்காந்தாரி அருகாகவந்தாள்
அவள்தனக்குகுறியுரைத்தேன் ஆணழகாகேளும்
மாபாவிகேட்டுமந்த மைந்தனுக்குரைக்க
மண்ணாளும்திரியோதிரன் வந்துகுறிகேட்டான்
அரசுமுடிமன்னனுக்கு ஆனகுறிசொன்னேன்
அவன்கேட்டுமன்னவனும் அடைத்தானேசிறையில்
கால்விலங்குகைவிலங்கு கனக்கவேதான்பூட்டி
காவலிலேவையுமென்றான் கள்ளனைப்போல்என்னை
மன்னன்வைத்தகாவலிலே மயிலனையாளிருந்து
மாயவரைத்தொழுது மாதுவெளியானேன்

வேறு

குறத்தியுரைத்ததெல்லாங் குறவனவன்கேட்டு
அரசாளுமன்னனுக்கு ஆண்மைகளுண்டானல்
அவனெத்தராசருடன் எதிர்த்துப்போர்செய்யவேண்டு [ம்
ஐவரையும்போலாகி வைத்தானேகாவலிலே
ஆரென்றுஎண்ணி யிருந்தானோஆணழகன்
கள்ளிதிருடியைப்போல் கட்டவந்தகாரியமேன்
விலங்கிட்டமன்னவனை வெட்டித்தலை துணிப்பேன்
காவலிலேவைத்தவனைக் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
ஐவரதுகையாலே அடியோடேமாளுதற்கு
காலங்களாச்சுதென்று கட்டழகன்போகலுற்றான்
குறவனுங்குறத்தியரும் கூடிவழிநடந்தார்
கட்டுவச்சிநாயகியும் கணவனுடனாக
அத்திபுரந்தாண்டி அங்கவளநாடுவிட்டு
காடுசெடிதாண்டி கரியமலைதான் தாண்டி
ஆறுசுனைதாண்டி அடர்ந்தவனந்தாண்டி
விராடநகர்க்கருகே வந்தாரிருவருமாய்
குறத்தியுருவழித்துக் கொம்பனையாள்போகலுற்றாள்
கட்டுவச்சிவேஷமாறிக் கன்னியருமங்கேவந்து

விராடத்தரசன்மனையில் வந்துமேவாழ்ந்திருந்தாள்
பணிப்பெண்ணைப்போலாகப் பாஞ்சாலியங்கிருந்து
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
குறவனுருமாறிக் கொற்றவனும் வடிவெடுத்து
பேடியைப்போலப் புகுந்தானரண்மனையில்
தர்மரைக்கண்டுமவன் சாஷ்டாங்கதெண்டனிட்டான்
பாஞ்சாலன்பெற்றதொரு பத்தினியாள் துரோபதை
குறத்திவடிவெடுத்துக் கொம்பனையாள்சென்றதுவும்
அத்திபுரத்தார்க்கு ஆனகுறம்சொன்னதுவும்
கபடன் திரியோதிரன் காவலிலேவைத்ததும்
அத்தனையுந்தானுரைத்து அர்ச்சுனன்போய்நடந்தான்
ஐவரும் துரோபதையும் அங்கேயிருந்தார்கள்
மன்னவரும்தேவியரும் மகாராசன் பட்டணத்தில்
சுகமாகவாழ்ந்திருப்பார் சுந்தரப்பூமுடியார்
இந்தக்கதைதன்னை எழுதிப் படித்தவர்கள்
பாஞ்சாலிதன்குறத்தைப் பக்தியுடன்கேட்டவர்கள்
துரோபதைகுறத்தைத் துரிதமாய்ப்படித்தவர்கள்
மாயன்பெருமாளின் தேவர்கிருபையினால்
நற்பதவிதானடைவார் நாட்டிலுள்ளயாவர்களும்
பெண்டுகளுக்குபயோகமாய் பிரபலமாயிருக்குதென்று
கீர்த்திவிளங்கக் கிருபையுடனச்சிலிட்டார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றப் முசியாமல்வாழ்ந்திருப்பார்
வாழிவாழியென்றுசொல்லி வரமளித்தார்ஈஸ்வரனார்

துரோபதை குறம்-முற்றிற்று.

O-,87GPU,D
N149
LIBRARY
102143

எம். எஸ். நெ-339. (10-9-49) காபி. 1000.

4B
7-1